பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆடி 4 ஷபா: 2 இதழ்: 158
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-7-77

# தேர்தல் பிரசாரம் இன்று நள்ளிரவுடன் முடிவு

(நமது நிருபர்)

**இலங்கைக் குடியரசின் முதலாவது பொதுத்தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. இன்றிரவுடன் பிரசாரக்கூட்டங்கள் முடிவுக்கு வந்துவிடும்.**

இலங்கைக் குடியரசின் இரண்டாவது அரசாங்கத்தை அமைப்பதற்கான பொதுத் தேர்தல் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறுகிறது. தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவும் ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களும் பொதுத் தேர்தலின் பின்னர் தாமே ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொள்வோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் வேளையில் வடக்கிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஒன்றுபட்ட ஈழத்தமிழினத்தை குலைக்க முயலவேண்டாம்!"

## யாழ். நகர் கண்ட ஜன சமுத்திரத்தில் எழுச்சிக்குரல்

### சர்வஜன வாக்கெடுப்பு ஏன்? எங்கு என்பதற்கு 'அமிர்' தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**புத்தளம்உட்பட வடக்குக், கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழ் ஈழத்தில், சர்வஜன வாக்கெடுப்பதற்காகவே இங்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். மற்ற இடங்களைப் பொறுத்தவரை அது சர்வஜன வாக்கெடுப்பாக கருத முடியாது. அதனால் தான் மற்றத்தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தவில்லை.**

யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எழுச்சிக் கூட்டத்தில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

**யாழ்.** கோட்டை மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் எழுச்சிக்கூட்டம்; கடல்அலையோ - ஜனசமுத்திரமோ என்று எண்ணும்வகையில் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்து, யாழ். நகரையே பிரமிக்க வைத்தது! அரசியல் கூட்ட வரலாற்றில் யாழ. நகர் கண்டிராத பல்லாயிரக்கணக்கான மக்களையும் தம்வசப்படுத்திய கோட்டை மைதானமும் ஒருதடவை திக்குமுக்காடிற்று! இந்த மக்கள் வெள்ளத்தின் முன்பாகத்தான் கூட்டணித் தலைவர்கள், தமிழ் ஈழக்கோரிக்கையை நேற்றிரவு வலியுறுத்தி மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக்கொண்டனர்!

முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: 'தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமானும் திரு. செல்லச்சாமி ஆகியோர் ஏன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவில்லையெனசிலர் கேட்கின்றார்கள். நாங்கள் தெளிவாகச் சிந்தித்தபின்னர் தான் இந்த முடிவுக்கு வந்தோம். வடக்கு கிழக்கிலும், புத்தளத்திலும் சர்வஜனவாக்கெடுப்பிற்காகவே உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். தமிழர்கள் மற்றும் இடங்களில் பரந்து வாழ்கின்றார்கள். ஆதலால், இலங்கை முழுவதும், உதயசூரியன் சின்னத்தில் அபேட்சகர்களை நிறுத்தி, சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிக்க முடியாது. நுவரெலியா, மஸ்கெலியா, கொழும்பு தொகுதிகளில் பெறும் வாக்குகளை சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிக்க முடியாது. ஏனெனில் ஆட்சியாளர்கள் மற்றும் இடங்களில் பெரும்பான்மையானோர் தமிழ் ஈழத்தை ஆதரிக்கவில்லையென்ற முட்டாள்தனமான கணக்கைக் காட்டுவார்கள் என்பதை விரும்பாததினால்தான் தமிழ் ஈழத்தில் மாத்திரம் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளரை நிறுத்தியிருக்கின்றோம்.

**'ஒற்றுமையைச் சிதைக்காதீர்கள்'**

'தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைக்க, குலைக்க எத்தனையோ சக்திகள் முயற்சி செய்துவருகின்றன. மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழினத்தின் ஒற்றுமையில் சிறிதளவு சிதைவுபட்டாலும் அது நமது விடுதலைக்குப் பெரும் தடங்கலாகவே இருக்கும். நமக்குள் ஏற்பட்ட ஒற்றுமையைக் குலைக்க, முயலவேண்டாம்'.

**'மலையகத்தின் நம்பிக்கை'**

இலங்கை தொழிலாளர்காங்கிரஸைச் சேர்ந்த திரு. வி. மருதமுத்து பேசுகையில், மலையகத்தில் தமிழ்மக்கள் பல்வேறு வழிகளால் துன்புறுத்தப்பட்டு வருகிறார்களென்றும் அவர்கள் தமிழர்விடுதலைக் கூட்டணியையே நம்பியிருக்கிறார்களென்றும் கூறினர்.

**'1980-க்கு முன்னர் தமிழ் ஈழம்'**

வவுனியா மகா வித்தியா

(8-ம் பக்கம் பார்க்க)

### "ஜி. ஜி. யின் வாதமும் வெளிவரும்'

யாழ்ப்பாணம், செவ். 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் மறைந்த சட்டமேதை திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி நிகழ்த்திய வாதங்களைத் திரட்டி வெளியிட்ட 'தமிழீழ இறைமை' நூலை நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுவைத்தார்.

அவர் அப்பொழுது உரையாற்றுகையில், "ட்ரயல் அட்பார்" நீதிமன்றத்தில் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் நிகழ்த்திய வாதங்களைக் கொண்ட நூலும் விரைவில் வெளிவரஇருக்கிறது என்றும் மொழிபெயர்ப்பு வேலைகள் இன்னும் முடியாததினால்தான் தாமதம் ஏற்பட்டது என்றும். இந்த நூலையும், 'தமிழீழ இறைமை' நூலை வெளியிட்ட திருச்செல்வம் குடும்பத்தினரே வெளியிட்டு வைப்பார்களென்றும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு நிருபர்கள்!

யாழ்ப்பாணம், செவ். நேற்றுயாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் எழுச்சிக் கூட்டத்துக்கு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களும் வந்திருந்தனர்.

ஜனசமுத்திரத்தைக் கண்டு பிரமிப்படைந்த இந்த நிருபர்கள், பல புகைப்படங்களை எடுத்ததுடன், கூட்டங்களில் விநியோகிக்கப்பட்ட பல துண்டுப் பிரசுரங்களையும் சேகரித்துக்கொண்டனர்.

### சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங். கொழும்பில் இன்று இழுக்கப்பட்ட 623-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
28 Z 0336
1 லட்சம் ரூபா

2-வது பரிசு:
48 E 0049
40,000 ரூபா

3-வது பரிசு:
06 Q 0736
10,000 ரூபா

சுயநிர்ணயக் கோரிக்கையை

# உலகுக்குணர்த்த தேர்தல் பயன்படும்!

## அமெரிக்க-கனடா தமிழ்ஈழ இயக்கத் தீர்மானம்

ஒட்டாவா, ஜூலை 18 'தேர்தல் மூலம் தமிழ் ஈழம் விடுதலை பெறுமென்பதில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லாவிடினும், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் எமது சுயநிர்ணயக் கோரிக்கையை உலகிற்கு உணர்த்த இத்தேர்தல்சந்தர்ப்பம்அளித்தால் தனி நாடு கோரிக்கை அடிப்படையில் சிறிதளவாவது உள்ளத் தூய்மையுடன் தேர்தலில் நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ அன்றேல் சுயாட்சிக் கழகத்திற்கோ வாக்குகளை அளிக்குமாறு தமிழ்த் தேசிய இனத்தவரை வேண்டுகின்றோம்."

கனடாவில் உள்ள தமிழ் ஈழ இயக்கமும், அமெரிக்கத் தமிழ் ஈழ இயக்கமும் அண்மையில் மிச்சிகனில் நடத்திய ஒரு கூட்டத்தில் மேற்கண்டவாறு ஒரு தீர்மானத்தை

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளிலும் கப்பல்களிலும் வேலைகள் பெற ஏற்ற பயிற்சிகள், கல்வி அமைச்சினால் தொழிற்பயிற்சி நிலையமென அங்கீகாரம் பெற்ற, இலங்கையின் ஒரே பயிற்சிநிலையம். NIET, வெல்டிங் (Electric and Gas) இலெக்ரிக் வயரிங், றேடியோ (Transistor) Motor Mech-anism, City and Guilds (Electrical) P.M.G. (Special) Certificate பகல் - இரவு வகுப்புகள். National Institutes, மைத் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6610

### யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கேள்வி விண்ணப்பம் (கால நீடிப்பு)

எமது மின்தறி ஆலையின் உற்பத்திப் பொருளாகிய, கிறே பப்ளின் (Grey Poplin) கேள்விப்பத்திரத்தின் மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் விலை விபரங்களைக் குறித்து 25-7-77க்குப் பிந்தாமல் சங்கக்காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொது முகாமையாளர்
74/3, அல்பிரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம், 6682

# பௌத்தகாங்கிரஸ் தீர்மானம் எமது ஒற்றுமையை வலுப்படுத்துகிறது

## நல்லூரில் துரைராஜசிங்கம் உரை

யாழ்ப்பாணம்,செல். ''இந்த நாட்டில் இனவாதத்திற்காக உயிர்துறந்த புத்த பிக்குவுக்குச் சிலைவடித்த அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த அப்பாவித் தமிழர்களுக்கு நாட்டப்பட்ட நினைவுச்சின்னத்தை உடைத்தெறிந்தது.''

இவ்வாறு நல்லூர் கல்யாண மண்டபத்திற்கு அருகில் நல்லூர்த் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் திரு மு. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடாத்தப்பட்ட கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய முன்னாள் யாழ். மாநகரசபை உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் கூறினார் மிகப்பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்த சிகரத்தின் முன்னால் சுமார் இருபத்தைந்துஅடி உயரமான இரண்டாவது மேடையிலிருந்து பேச்சாளர்கள் உரை நிகழ்த்தினர்கள். திரு. துரைராஜசிங்கம் தொடர்ந்து பேசியதாவது;

''இந்த நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள் தாம் செல்லுமுன் ஆட்சியை சிங்கள மக்களிடம் ஒப்படைத்தார்கள். இதைத்தொடர்ந்து சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் ஊடுருவலினால் தமிழ் நிலங்கள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டுள்ளன. இப்படியே விட்டால் இன்னும் சில ஆண்டுகளில் தமிழ் மண்முற்று முழுதாகப் பறிக்கப்பட்டுவிடும். இன்று முஸ்லிம்களிலும் இந்த அரசாங்கம் கைவைத்துள்ளது.''

'ஐக்கிய தேசியக் கட்சியினரால் தமிழ்மொழிக்குச் சலுகை வழங்கப்பட்டபோது அதை எதிர்த்த சிங்களப்பிக்கு துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார் இந்த ஸ்ரீலங்கா அரசாங்கம் அவருக்குச்சிலை எடுத்தது. ஆனால் அப்பாவி முஸ்லிம் மக்களும் தமிழ்மொழியின் பெருமை கேட்கவந்த தமிழ்மக்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். அவர்களுக்காக நிறுவப்பட்ட நடுக்கல்லைக்கூட இந்த அரசாங்கத்திற்குப் பொறுத்துக்கொள்ளவில்லை. இந்தநிலையில் பௌத்த காங்கிரஸின் தீர்மானம் எம் இனத்தின் ஒற்றுமையை இன்னும் வலுவடையவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்துன்றது. தமிழன் தன்மானத்துடன் வாழ தமிழ் மண்ணில் தமிழ்ஈழம் தான தனியொரு வழி என்ற எமது இலட்சியத்தை நாம் அடைவதற்குப் புறப்பட்டுவிட்டோம். எம்மைவிட நிலப்பரப்பால், சனத்தொகையால் மிகக்குறைந்த நாடுகளே இன்று சுதந்திரம் அடைந்துள்ள போது நாகரிகத்தாலும் தனித்துவமான பண்பாடு, கலை,கலாச்சாரத்தாலும் சிறப்புற்று விளங்கிய நமது இனம் சுதந்திரம் பெறுவதில் என்ன தவறு?

### சிவா பேச்சு

நல்லூர்த் தொகுதி அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் ''நாம் கனவு காண்கின்ற தமிழ் ஈழம் மிக விரைவில் அமைந்தே தீரும். நாம் இன்று இரண்டு நோக்கங்களுக்காக தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஒன்று தமிழ் ஈழக்கொள்கை இதற்கு நீங்கள் வழங்கும் ஆதரவு இத் தேர்தலின் முடிவுகளாகும். இரண்டாவது தமிழர் ஐக்கியம் இன்று நாம் மேற்கொண்டுள்ள இந்த ஒற்றுமையணி என்றுமே குலையாமல் எமது இலட்சியமான தமிழ் ஈழம் அமைப்பதன்மூலம் சிங்கள மக்களுக்கும் சிங்களக்கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துக்காட்ட வேண்டும்'' என்றார்.

தொழிலதிபர் திரு. எஸ். தியாகராசா பேசியதாவது:

''இன்று சுயேச்சை வேட்பாளர்கள் இன்சன வாக்கெடுப்பையும், நாம் சர்வஜனவாக்கெடுப்பையும் நடாத்துகின்றோம். நாம் இந்த நாட்டில் நலிவுற்று மெலிவடைந்து வாழப்போகின்றோமா அல்லது தன்மானத் தமிழர்களாக தலைநிமிர்ந்து வாழப்போகின்றோமா என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுவதே இத்தேர்தலில் கூட்டணியின் நோக்கமாகும். இன்று எமது இனம் வாழ நம்மை நாமே ஆள வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். தனிப்பட்ட எந்தச் சுயேச்சை வாதிகளின் விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு மக்கள் தமது பொன்னான வாக்குகளை வீணடிக்கக் கூடாது. நாளை மலரும் நற்றமிழ் நாட்டிற்குக் காணிக்கையாய் தமிழ்ப்பெருமக்கள் தமது வாக்குகளை உதயசூரியனுக்கே அளிக்கவேண்டும்.

சட்டத்தரணி திரு. ஆர். விஸ்வநாதன் பேசுகையில்

''மறைந்த சட்டமேதை திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் சென்றமுறைத் தேர்தலில் போட்டியிட்டபோது சுயேச்சை வாதிகளுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்று சொன்னார். தன்னைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிந்ததை எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை. இன்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கமும், இனிவரும் அரசுகளும் தமிழுக்கு விமோசனமளிகப்போவதில்லை. அண்மையில் திரு. ஜே. ஆர். ஒரு கூட்டத்தில் ரோகணவிஜய வீராவுக்குப் பரிந்துபேசி இருக்கின்றார். தமிழ் இளைஞர்கள் அநியாயமாகச் சிறை வைக்கப்பட்டபோது அதுபற்றி எதுவுமே பேசாத ஜே. ஆர். 'தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் விமோசனம் அளிப்பாராம் இதையாரும் நம்பமுடியுமா'' என்றார். (கா—அ)

## துணிகரத் திருட்டில் சிறுவர்

தெமட்டகொட. திங்கள் பூட்டப்பட்ட வீடொன்றை உடைத்துத் திருட்டில் ஈடுபட்டிருந்த இரு சிறுவர்கள் பிடிபட்ட சம்பவம் ஒன்று தெமட்ட கொடையில் நடைபெற்றுள்ளது.

தெமட்ட கொடையில் வசிக்கும் நபர்ஒருவர் தமது வீட்டை பூட்டிவிட்டு சங்கக் கடைக்குச் சென்று வீட்டுத் திரும்பிய சமயம் வீட்டின் முன்பக்ககதவு திறக்கப்பட்டு பூட்டு உடைக்கப்பட்டுக் கிடைப்பதைக் கண்டு அதிர்ச்சியுடன் வீட்டினுள் நுழைந்த போது இரு சிறுவர்கள் அலுமாரி ஒன்றைத் திறந்து அதற்குள் இருந்த பொருட்களை களவாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

இவரைக் கண்டதும் இவர்கள் ஓட முயற்சித்தபோது இவர்களில் ஒரு சிறுவனைஇவர் பிடித்துக் கொண்டார். மற்றச் சிறுவன் தப்பி ஓடிவிட்டான். பொலிஸ் அதிகாரி டேவிட்புல விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

இதே சமயம் பிரேமரத்தின என்ற பொலிஸ் கன்ஸ்டபிளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து மற்றச் சிறுவனும் கைது செய்யப்பட்டான்.

இவர்கள் 5250ரூபா பெறுமதியான பொருட்களைக்களவாடியுள்ளனர். பொலிசார்நடாத்திய விசாரணைகளில் இருந்து இவ்விரு சிறுவர்களும் மக்கோனை சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் இருந்து தப்பி ஓடியவர்கள் என்றும் தப்பி ஓடிய காலத்தில் இருந்துபிரபல கேடி ராஜா அல்லது ரஞ்சித் என்பவனுக்குக் கீழ் இருந்து வந்துள்ளனர் என்றும் ராஜா இவர்களை வைத்து முடிச்சுமாற்று வேலைகளைச் செய்துள்ளான் என்றும் தெரியவருகிறது.

## தவறான செய்தி

யாழ்ப்பாணம், செவ்வாய் இம்மாதம் 15ம்திகதிய ''ஈழநாடு'' இதழில் 'தலையற்ற சிசுவின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு' என்னும் தலையங்கத்துடன் வெளியாகிய செய்தி தொடர்பாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சட்டத்தரணி திரு மு.சபாநாதன் பின்வரும் விளக்கத்தை அனுப்பிவைத்துள்ளார்.

''எனது வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் ஒரு வெளிவளவில் இருக்கும் கிணறொன்றில் தலையற்ற சிசுவின் சடலம் இருப்பதாக வதந்தி பரவியது. என் தகவலையடுத்து சங்கானை பொலிசார் குறிப்பிட்ட கிணற்றில் அப்பொருளை எடுத்து பரிசீலனை செய்தபோது அது ஒரு மிருகத்தின் குடற்பகுதி எனத் தெரிய வந்தது. எனவே இச் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும் என்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.''

# ''தன்மானத்தை நிலைநாட்டும் தேர்தல் இது''

கிளிநொச்சி, திங்கள் ''ஈழநாட்டில் வாழ்கின்ற தமிழ் தேசிய இனம் சுதந்திரமாகவும் தன்மானத்துடனும் வாழத் துணிந்துவிட்டதென உலகநாடுகளுக்கும் உணர்த்தும் தேர்தலாக இத் தேர்தல் அமையவேண்டும்''.

இவ்வாறு கிளிநொச்சி கூட்டணி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியை ஆதரித்து கனகபுரம்—திருநகர் மக்கள் நடாத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய திரு. மாவை சேனாதிராசா கூறினார்.

திரு. பி. எவ். சேவியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தந்தை செல்வா கடந்த 30 ஆண்டுகளாக சிங்கள இனத்தின் இருபெரும் கட்சிகளுடன் ஒப்பந்தங்கள் செய்தும், போராடியும், வாதாடியும் தமிழர்களுடைய உரிமைகளை பெறமுடியாமலே இருந்தது.

ஏகாதிபத்தியவாதிகள் தமிழர்களின் உரிமைகளை தர மறுத்து பல ஆக்கிரமிப்புக்களையும் மொழித் திணிப்புக்களையும் எம்மேல் திணித்தனர்.

பின் 1972ம் ஆண்டு ஆட்சியாளர் கொண்டுவந்தகுடியரசு யாப்பு தமிழனை இரண்டாந்தரப் பிரஜையாக்கி விடுகிறது என்பதை உணர்ந்தே தந்தை செல்வா காங்கேசன்துறையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ''தமிழ்ஈழம்'' என்றஇலட்சியத்திற்கு மக்கள் மதிப்புக் கொடுத்து சம்மதம் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பூராவும் கூட்டணிவெற்றி பெறும். இங்கு வாழ்கின்ற முழுத் தமிழ் பேசும் மக்களும் தமிழர்கூட்டணியை ஆதரிப்பதுடன் தமிழ்ஈழ விடுதலையை விரும்புகின்றனர்''.

மற்றும் கரிகாலன், சிவதாசன், கிருஷ்ணராசா, திருஞானம் ஆகியோரும் பேசினர். (உ)

## பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம், செவ். யாழ். கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்று வரும், சமயபாட ஆசிரியர்க்கான, பயிற்சி வகுப்பின் ஓர்அம்சமான, திருமுறைப்பண்ணிசைப் பயிற்சிவகுப்பு, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனப் பண்ணிசை வேந்தன், தாவடியூர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தனால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மலேஷியன் கைமார்க் சாம்பிராணி

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

# 'தமிழர் பொருளாதாரபலம் பெற உழைப்பேன்'

## விஞ்ஞாபனத்தில் குமார்

யாழ்ப்பாணம், செவ். தமிழ்பேசும் மக்கள் சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திரத்தை நிலைநாட்டக்கூடிய வகையில் அவர்களைப்பொருளாதார ரீதியில் பலப்படுத்துவது தமது முக்கிய குறிக்கோள் என்று யாழ்ப்பாணத்தொகுதி சுயேச்சை வேட்பாளரும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவருமான திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது விஞ்ஞானத்தில் தாம் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளவற்றின் சுருக்கம் வருமாறு:-

தமிழ்பேசும்மக்களின்-குறிப்பாக யாழ்ப்பாணத் தொகுதியில் நிலவும் மோசமான வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழித்தல், புதிய பொருளாதார முயற்சிகளை மேற்கொள்வதற்கு இளைஞர்களுக்கு ஊக்கமளித்தல், தொழிற்சாலைகளை நிறுவ உழைத்தல்.

### கடற்றொழில்

இப்போதுள்ளதிலும்பார்க்க அதிகமான நீர்ப்பரப்பில் மீன்களைப்பிடிக்கும் வகையில் கடற்றொழிலை மேலும் இயந்திரமயமாக்கவும், நவீன முறையில் அபிவிருத்திசெய்யவும், கரையோரப்பகுதி முழுவதிலும் தேவையான இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை ஏற்படுத்தவும் அபிவிருத்திசெய்யவும்; கைத்தொழி மந்திரியாக விளங்கிய காலத்தில் பொருளியல்மேதை அமரர் ஜி. ஜி. குருநகரில் நிறுவிய ஐஸ் தொழிற்சாலையை மேலும் பெருப்பித்து அதன்சேவையை அதிகரிக்கவும், கரையோரப் பகுதிகளில் அமரர் ஜி.ஜி யால் ஆரம்பிக்கப்பட்ட கடலேரிக் குடியேற்றத்திட்டங்களை அபிவிருத்தி செய்யவும், நவீன முறையில் அமைந்த மீன்பிடிப் படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும், நைலோன், குறுலோண் போன்ற வலைகளையும், கணிசமான அளவில்இறக்குமதி செய்து அவற்றை ஒழுங்கான முறையில் கடற்றொழில் மக்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்து தற்போது நிலவும் பற்றாக்குறையை நீக்கவும், இத் துறையில் மேலும்பல அபிவிருத்திகள் மேற்கொள்ளுதல்.

### கைத்தொழில்

பொற்றொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், தெங்கு-பனம்பொருள் உற்பத்தித் தொழிலாளர்கள் இவர்கள் போன்ற ஏனைய கைத்தொழிலாளர்களின் துன்பங்களை நீக்குவதற்கும், தொழில் வளர்ச்சிக்கு உதவும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

### வீடின்மை

குடியிருக்க வீடின்றித் தவிக்கும் மக்களின் குறைகளைப் போக்கிடப் புதிய வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கத்தின் உதவியோடு ஏற்படுத்தித் தருவதோடு அதில் வசிக்கும் மக்களுக்கே வீடுகள் இலகுவில் சொந்தமாகும் வகையில் ஏற்பாடுகளைச் செய்தல்.

### உரிமைப்பிரச்னை

அரசியல் திட்டம்: குடியரசு அரசியல் அமைப்புப் திட்டத்திற்கு எதிரான தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பை எப்பொழுதும் காட்டுவேன். குடியரசு அரசியலமைப்பில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் திருத்தங்களைச் செய்வதற்கு முயற்சிப்பேன்.

மொழி; தமிழ்மொழியின் சமஉரிமையைச் சிறிதும் விட்டுக்கொடுக்காது வற்புறுத்துவேன், போராடுவேன்.

மதம்: மதவேறுபாடுகள் பாரபட்சங்கள் காட்டும் சட்டங்கள் இயற்றப்படுமானல் முழுமூச்சாக அவற்றைஎதிர்ப்பேன்.

நிலம்; திட்டமிட்ட அரசாங்கக் குடியேற்றங்களின் மூலம் தமிழ்பேசும்மக்களின் பாரம்பரிய தாயகம் பறிக்கப்படும் கொடுமையைத் தீவிரமாக

[8-ம் பக்கம் பார்க்க[

# மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்: ஜெயப்பிரகாஷ் வலியுறுத்து

## மனோகரன் வரவேற்கிறார்

சென்னை, ஜூலை 18

இந்திய மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்என்ற சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணின் கொள்கையை தமிழ்நாடு நிதிஅமைச்சர் திரு கே. மனோகரன் வரவேற்றுள்ளார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. மனோகரன் தமது கருத்தை வெளியிட்டார்.

தமிழ்நாட்டுக்கு அதிகஅதிகாரங்கள் வழங்கும்பட்சத்தில் எங்கெல்லாம் அவசியமோ அங்கெல்லாம் சிறு தொழிற்சாலைகளை உருவாக்கி வேலையில்லாப் பிரச்னைக்கு முடிவுகாண்பதுடன் நாட்டை மேலும் அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுப்போம் என்றும் திரு. மனோகரன் தெரிவித்தார் (இ)

## 100 மீனவர் ஆழ்கடலில் மாயம்!

சென்னை, ஜூலை 18

தமிழ்நாட்டின் மேற்குக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 100 மீனவர்களைக் காணவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இவர்களைத் தேடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப்போய்விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## உயிருடனே உயிரற்றோ என்னைக் கைது செய்யுமாறு இந்திரா உத்தரவிட்டிருந்தார்!

### முன்னாள் பிரதமரின் கூற்றுக்கு சுப்பிரமணியசுவாமி மறுப்பு

புதுடில்லி, ஜூலை 18

இந்தியாவில் நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோது தம்மை உயிருடனே உயிரற்ற நிலையிலோ கைது செய்யுமாறு திருமதி இந்திராகாந்தி உத்தரவிட்டிருந்தாரென்றும் இதற்காக 20 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததாகவும் லோகசபைஉறுப்பினரான திரு. சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

நெருக்கடிநிலை அமுலில் இருந்தபோது தாம் எதிர்க்கட்சித் தலைவர் எவரையும் சுட்டுக்கொல்லுமாறு உத்தரவிடவில்லை என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையை ஆட்சேபித்தே திரு. சுப்பிரமணியசுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிருடனே அல்லது உயிரற்ற உடலாகவோ தம்மைக் கைதுசெய்யுமாறு இந்திய அரசுஉத்தரவிட்டிருப்பதாகத் தாம் பிரிட்டிஷ் அரசிடம் கூட புகார் செய்திருந்ததாகவும் திரு. சுப்பிரமணியசுவாமி நேற்றுப் பத்திரிகை நிருபரிடம்தெரிவித்தார்.

நெருக்கடிநிலை அமுலிலிருந்த வேளையில், அப்போது ராஜ்யசபை உறுப்பினராக இருந்த திரு. சுப்பிரமணிய சுவாமியைக் கைதுசெய்யுமாறு அரசு உத்தரவுபிறப்பித்ததும் அவர் இந்தியாவிலிருந்து இரகசியமாகத் தப்பிஓடி பிரிட்டனிலும் அங்கிருந்துசென்று அமெரிக்காவிலும் தங்கியிருந்துவிட்டு லோகசபை கலைக்கப்பட்டதும் நாடுதிரும்பியதும் வாசகர்கள் தெரிந்ததே.

நாடுதிரும்பியதும் திரு. சுப்பிரமணியசுவாமி கடந்த மார்ச்மாதம் நடைபெற்ற லோகசபைத் தேர்தலில் வெற்றிபெற்று இப்போது ஏம். பி.யாகப் பணிபுரிந்து வருகிறார். (இ)

## கடலில் வீழ்ந்த விமானம்!

லண்டன், ஜூலை. 18

மத்திய பிலிப்பைன்ஸில் கடலில் விழுந்த விமானத்திலிருந்த பிரயாணிகளையும் விமானிகளையும் கிராமவாசிகள் உயிருடன் மீட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

25 பிரயாணிகள் இவ்விமானத்தில் பயணம் செய்தனர்.

மத்திய பிலிப்பைன்ஸ் விமானநிலையத்தில் இறங்கும் போதே விமானம் கடலில் விழுந்ததாகவும் அக்கடற்கரையில்வசித்து வந்த கிராமவாசிகள் தமது படகுகளில்சென்று பிரயாணிகளையும் விமானிகளையும் மீட்டு வந்தனர் என்றும் கூறப்படுகிறது. (இ)

## புதியசெய்மதி

மாஸ்கோ, ஜூலை 18

சோவியத்யூனியன் 'கொஸ்மஸ்-929' என்ற புதிய செய்மதி ஒன்றை நேற்று விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. (இ)

தென் கொரியாவிடமிருந்து

## அமெரிக்க காங்கிரஸார் லஞ்சம் பெற்றனராம்

நியூயோர்க், ஜூலை 18

தென்கொரிய அரசிடமிருந்து லஞ்சம் பெற்ற அமெரிக்5 அதிகாரிகள் பட்டியலில் 11க அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களின் பெயர்களும் இடம் பெற்றிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் எழுதியுள்ளது.

அமெரிக்காவுக்கும் தென் கொரியாவுக்குமிடையில் ''விசேஷ உறவு''களைப் பேணுவது தொடர்பான தேவைகளையொட்டியே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு தென்கொரிய ஆட்சியாளர் 'சந்தோஷம்' வழங்கியதாக இப்பத்திரிகை மேலும் எழுதியுள்ளது.

இந்த லஞ்ச விவகாரங்கள் பற்றி முன்னர் வெளியிடப்பட்ட தகவல்களில் தரப்பட்ட விபரங்களை விட இன்னும் பல 'மர்மங்கள்' வெளியாகாமல் இருப்பதாகவும் நியூயோர்க் டைம்ஸ் எழுதியுள்ளது. (இ)

## 'சனசமூக நிலையங்களின் பணி'

அரியாலை, திங்கள்

'சனசமூக நிலையங்கள் கிராம மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் பணியில் முன்னின்று உழைக்கின்றன. கிராமமக்களிடையே மெய்வல்லுனர் போட்டிகளை நடாத்தி உற்சாகப்படுத்தி வருவதுடன் விளையாட்டு வீரர்களிடையே ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், கீழ்ப்படியுந்தன்மையையும் கட்டிவளர்க்கின்றன.

இவ்வாறு அரியாலை தெங்கு பனம்பொருள் விற்பனவுக்கூட்டுறவுச்சங்க முகாமையாளர் திரு. மா. துரையப்பா கலைமகள் சனசமூக நிலையத்தின் 31வது வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் எம். ஜி. தில்லைநாதன் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. (உ)

## "தமிழர் ஒற்றுமையின் சின்னமே கூட்டணி"

அரியாலை, திங்கள்

''முஸ்லீம் மக்களும் தமிழ் ஈழத்தில்தான் தமது கலைகலாச்சாரங்கள் பேணிப்பாதுகாக்கப்படும் என்பதனை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து உழைக்க முன்வந்துள்ளனர். தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களுடன் சிறுபான்மைத் தமிழரும் கூட்டணிக்கு பூரண ஆதரவளிக்க வேண்டும்''

இவ்வாறு நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு.மு.சிவசிதம்பரத்தை ஆதரித்து நாயன்மார்க்கட்டு காந்தி நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. நா. முருகேசன் பேசுகையில் கூறினார்.

திரு.ஜேசுதாஸன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்''தமிழன் ஒற்றுமையின் பலத்தைக் காட்டும் இயக்கமே கூட்டணி ஒற்றுமையின்சின்னம் இது என்றார்.

திருவாளர்கள்! குணராசா, கரிகாலன், குணரத்தினம் முதலானோரும் பேசினர். (உ)

## 'வாலிபர் - வனிதையர்க்கு தேசிய உணர்வு வேண்டும்"

கிளிநொச்சி, திங்கள்

''நாம் தேசிய உணர்வுடன் செயல்படவேண்டும். படித்த வாலிபர்களும் யுவதிகளும் உத்தியோகங்களை எதிர்நோக்கி இருக்கக் கூடாது. நம் நாட்டிற்குத் தேவையான விவசாயத்தில் ஈடுபடுவதனுல் அவரவர் பிரச்னைகளையும், நாட்டின் உணவுப் பிரச்னையையும் ஓரளவு தீர்த்து கொள்ளலாம்.

இவ்வாறு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் கைத்தொழில் விவசாய நிலையம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய சமாதான நீதிபதி திரு சிவ. கந்தையா கூறினார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சியில் குற்றச்செயல் குறைவாம்

### பாக். இராணுவபீடம் மகிழ்ச்சி

இஸ்லாமாபாத், ஜூலை. 18

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் குற்றச் செயல்கள் குறைந்துள்ளது என்று பாகிஸ்தான் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சியில் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் பொருட்களின் விலைகளும் வெகுவாகக் குறைந்துள்ளன என்றும் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

நாடு முழுவதும்நடைபெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடமாடும் இராணுவ நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன என்றும் இந் நீதிமன்றங்களில் உடனுக்குடன் விசாரணைகள் நடைபெற்று தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன என்றும் இராணுவ அரசு தெரிவித்துள்ளது. (இ)

## பாகிஸ்தானில் பெருமழைக்கு 450பேர் பலி!

இஸ்லாமாபாத், ஜூலை18

பாகிஸ்தானில் கடந்த சிலதினங்களாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக இவரை 450பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் ஜூலை மாதம் பெய்த மழையைவிட இவ்வருடம் இருமடங்கு மழை பெய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## படுகாயம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியை அடுத்துள்ள அக்கராயன் குளத்தில் யானையின் தாக்குதலுக்கு ஆளான பழனிச்சாமி என்பவர் பலத்த காயங்களுடன்யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இப்பகுதியில் யானைகளின் அட்டகாசம் கூடிவருவதாக அக்கராயன்குளம், கிராம சேவையாளர் திரு.கே.சாந்தலிங்கம் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். யோகநாதனுக்கு புகார் செய்ததைத்தொடர்ந்து யானைத் தொல்லையைநீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (உ)

## தமிழர்விடுதலை கூட்டணியை ஆதரிக்க வேண்டும்'

### ஆசிரிய சங்கப்பிரமுகர் வேண்டுகோள்

கிளிநொச்சி, திங்கள்

இந்தநாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் தேசிய இனம் கலை, கலாச்சாரம், நிலம், மொழி, கல்வி ஆகியனவற்றைப் பாதுகாத்து வாழவேண்டின் தமிழ் ஈழம் அமைக்கப் போகும் ஒரே இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியை எல்லாத் தொகுதிகளிலும் அமோக வெற்றியீட்டச் செய்யவேண்டும்'' என்றுகிளிநொச்சி பூராவும் சூறாவளிப் பிரசாரம் செய்துவரும் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உப செயலாளரும், கிளிநொச்சிக் கிளையைச் சேர்ந்தவருமான திரு. சோதிநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசியல் சுதந்திரமுள்ள ஆசிரியர்கள் தமது உரிமையைச் சதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு யாரும் தடையாக இருக்கமுடியாது என்றும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த அரசினால் ஏற்பட்ட பாதிப்பைச்சொல்ல முடியாதென்றும், ஆசிரிய இடமாற்றங்களில் அரசியல் கலப்பு, ஆசிரிய நியமனங்களில் அரசியல் கலப்பு என்று ஆசிரிய உலகம் நேரடியாகவே ஆட்சியாரால் பாதிப்படைந்தது என்றும் தரப்படுத்தலால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தமிழர் தலைநிமிர்ந்து வாழ தமிழர் விடுதலைக் கூட்டணியை நேரடியாக ஆதரிக்க வேண்டியுள்ளது என்றும் இன்று ஒரு தூய்மையான, புனிதமான இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி என்றும் அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## விவசாயிகள் நலன் கருதி...

வேலணை, திங்கள்

தீவுப்பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களுக்கு தேவையான விவசாயப் பொருட்கள், கிருமிநாசினிகள் முதலியனவற்றை பெற்றுக் கொள்வதற்கு அவ்வப்பகுதிகளில் உள்ள தொடர்புக் கமக்காரர்களின் சிபார்சுகளின்பேரில் விவசாயப் போதனாசிரியர் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

இதற்காக தீவுப்பகுதி முழுவதும் எண்பது தொடர்பு கமக்காரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என தீவுப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க. சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார். (உ)

**மணிவாக்கு**

வதந்திகளுக்கு காதுகொடாதே; காதுகொடுத்தாலும், அதை நம்பாதே.
—காந்தி மகான்

ஈழநாடு

THE EELANAADU

## வாக்காளர் கடமை

இன்றிரவுடன் தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வந்துவிடும்.

கடந்த ஒன்றரைமாதங்களாக நாட்டின்மூலைமுடுக்குகளிலெல்லாம் அலறிய ஒலிபெருக்கிகள் இன்றிரவுடன் ஓய்ந்துவிடும்.

தினமும் ஓய்வுஒழிச்சலின்றி பல கூட்டங்களில் பேசிவந்த பேச்சாளர்கள், கட்சிப்பிரசாரகர்கள் இன்றிரவுடன் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.

வேட்பாளர்களும் கட்சிகளும் கடந்த ஒன்றரை மாதத்தில் கொடுத்தவாக்குறுதிகள் அதிகம். இந்தவாக்குறுதிகள் அனைத்தையும் வாக்காளர்கள் நினைவில் வைத்திருப்பது கஷ்டம்.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன சுயேச்சை வேட்பாளர்களும் கட்சிவேட்பாளர்களும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த விஞ்ஞாபனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளைப் பார்த்தால் தேர்தல் முடிந்து அடுத்த சில வருடங்களுக்குள் தொகுதிகள் அனைத்தும் சுவர்ணபுரியாக மாறிவிடும் என்று சொல்லலாம்.

இவையெல்லாவற்றையும் வாக்காளர்கள் நன்கு ஆராய்ந்திருக்கிறார்கள்.

நமதுநாட்டு வாக்காளர்கள் விவேகிகள் என்பது வேட்பாளர்களுக்குத் தெரியும்.

நாளை ஒருநாள்தான்வாக்காளர் சிந்தித்துமுடிவுசெய்வதற்குஅவகாசமிருக்கிறது.

நாளை மறுதினம் காலை எட்டுமணிக்கு வாக்களிப்புத் தொடங்கிவிடும்.

வாக்களிக்கும் உரிமையைச் சரியாகப்பயன்படுத்த வேண்டும்.

தென்னிலங்கையில்ஆட்சி பீடத்தில் எந்தக்கட்சி அமர்வது என்பதற்கானபோட்டி வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களின் உரிமைக்காக நடைபெறும் போட்டி. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரேஇலட்சியத்துக்காகப் பலர்மோதுகிறார்கள். சுயேச்சைவேட்பாளர்களே இப்பகுதிகளில் அதிகமாகப் போட்டியிடுகின்றனர்.

வாக்காளர் நன்கு சிந்தித்து நாளை மறுதினம் தங்கள் பொன்னான வாக்குகளை அளிப்பதன்மூலம் நல்ல தீர்ப்பு வழங்குவார்கள் என்றே எதிர்பார்ப்போம்.

## தந்தையை எதிர்த்தவர்களும் கூட்டணி வேட்பாளர்களாம்

வண்ணார்பண்ணை, திங்கள்

தந்தைசெல்வாவின் கொள்கையை எதிர்த்து சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளித்தவர்கள் கூட இன்று தமிழர்விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களாக இருக்கிறார்கள்' என்று ஊர்காவற்றுறைத் தொகுதி சுயாட்சிக்கழக வேட்பாளர் திரு.வி. நவரத்தினத்தை ஆதரித்து மண்டைதீவில் நடைபெற்ற கருத்தரங்கில் சட்டத்தரணி திரு. என். சிறிகாந்தா உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'மட்டக்களப்பைப் பொறுத்தவரை இரு தொகுதிகளாக்கப்பட்டதே, தமிழ் எம். பி. ஒருவரும் முஸ்லிம் எம்.பி ஒருவரும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் தமிழர் ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள் இதனை மீறிவிட்டனர்' என்றார்.

சுயாட்சிக்கழகப் பொதுச் செயலாளர் திரு, எஸ். கோடீஸ்வரன், திரு எஸ். வரதராஜா உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

## ''சுயாட்சிக்கழகப் போக்கு நகைப்பைத் தருகிறது''

—சி கதிரவேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம், செவ்வாய்

''ஏழு ஆண்டுகளாக தமிழர் துயர் கண்டு வாளாவிருந்த சுயாட்சிக்கழகம் தேர்தல் வந்ததும் துடித்தெழுந்து அரசியல் பேசுவது நகைப்பிற்கிடமானது''

இவ்வாறு கோப்பாய் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து வேலணை 8ம் வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. அண்ணதாஸன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில், தமிழ் இளைஞர்கள் இன்று ஒற்றுமைப்பட்டு ஒரு குடையின் கீழ் திரண்டுவிட்டதால் அவர்களைத் திசை திருப்ப வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்படுவது கண்டனத்திற்குரியது'' என்றார்.

சட்டத்தரணி சற்குணநாதன் செல்வகுமார், உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில் பேசினர். (கெ-உ)

## மருந்துத் தட்டுப்பாடு

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியை அடுத்துள்ள அக்ராயன் அரசினர் வைத்தியசாலையில் நோயாளருக்கான மருந்து தட்டுப்பாடாக உள்ளதாம்

இப்பகுதி மக்கள் இங்கு மருந்து தட்டுப்பாடாக உள்ளதால் பலமைல்கள் வண்டி-பஸ்கள் மூலமாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வரவேண்டிய நிலை உள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றன. (இ)

## இன்று ரதோற்சவம்

வண்ணை சிவன் கோயிலில் தேர்த் திருவிழாவாகிய இன்று காலை 6-30மணிக்கு வசந்த மண்டபப் பூசையும்; 8மணிக்கு ரதாரோகணம்; மாலை 5மணிக்கு ரதா அவரோகணமாகு அம்பாள் ஆலயம் சேர்தலும் மாலை 6 மணிமுதல் 7-30 மணி வரை திரு. கே. வி. தம்புவின் இன்னிசைக்கச்சேரியும்நிகழும். (அ)

# தமிழரின் இன்றைய பரிதாப நிலைக்கு யார் காரணம்?

### ஜேம்ஸ். ரி. இரத்தினம் விளக்கம் தருகின்றார்

தமிழர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில்வாக்களிப்பதற்குமுன்பு இரண்டுமுறை சிந்திக்கவேண்டும் இவைகள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே. ஆர் ஜெயவர்த்தன திருகோணமலையில் கூறிய சொற்களாகும். ஆனல், அதே பேச்சில் 'ஐக்கிய தேசியக்கட்சி இலங்கையைப் பிரிக்க அனுமதிக்கமாட்டாது' என்றும் கூறியுள்ளார். இது உண்மையாக, ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களிப்பதற்கு முன்பு தமிழர்களை நிச்சயமாக இரண்டு முறை சிந்திக்கவைக்கும்.

வேறு ஏதேனும் குழுவை அல்லது தனிநபரைவிட இந்நாட்டில் தமிழ் அபிப்பிராயத்தைப் பிரதிநிதித்துவஞ் செய்யும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தேர்தலில் முதலாவது முறையாகத் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நுவரேலியா, மஸ்கெலியா, கொழும்பு மத்திய தேர்தல் தொகுதிகளிலுள்ள தமிழ்ப்பேசும் வாக்காளர்களை அதன் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படியும் இத்தேர்தலை ஒரு பொதுக் கருத்து அறிவிப்பாகக் கருதும்படிகேட்டுள்ளது.

தமிழர்கள் இன்று அடைந்துள்ள பரிதாபமான கட்டத்திற்கு அதாவது அவர்களினல் அங்கீகரிக்கப்பட்டதும் வரலாற்றினல் நிரூபிக்கப்பட்டதுமான தாயகமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களாகிய ஈழத்தில் தங்களைத் தனியாக விடும்படியும், தமது சொந்த மொழியைப்பேசவும், சுதந்திரமாகவும் கௌரவமாகவும் தங்களுடைய சொந்தமுறையில் வாழவிடும்படியும் சிங்களவர்களைக்கேட்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியமை, முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஒத்துவரமறுக்கிறபோக்கினலும், லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிபோன்ற மனிதப் பற்றுக் கோட்பாடுடைய திவிரப் போக்குடைய கட்சிகளின் துணிவின்மையினலும் ஏற்பட்டதொன்றாகும்.

நாட்டிலுள்ள இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளில் ஒவ்வொன்றும், அரசியல் சலுகைகளைத் தமிழர்களுக்குக் கொடுத்ததாக மற்றொன்றைக் குற்றஞ்சாட்டியுள்ளது. தமிழர்கள் தனிநாட்டிற்குக் குறைந்ததொன்றினல் திருப்தியடைய மாட்டார்கள் என்ற இன்றைய மாறுதலடைந்த நிலைமையின் பின்னணியில் கடந்த காலத்தை நோக்கும்பொழுது, உத்தேசிக்கப்பட்ட சலுகைகள், செல்வந்தர் ஒருவரின் மேசையிலிருந்து விழும் துண்டுகளாகும். தமிழர்களுக்கு இவைகளும் மறுக்கப்பட்டன.

### சுதந்திரப் போரில் தமிழர் பங்கு

தமிழர்கள். பிரித்தானியர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்றனர். சிங்கள உறுப்பினர் எதிர்த்தபொழுதுஇராமநாதன் சட்டசபையில் வெசாக் விடுமுறையைக் கோரினர். அனுமதேய மாணவர் பிரசித்தி பெறுகின்றார் எனச் சிங்கள உறுப்பினர் கூச்சலிடும்வேளையில், அடக்கி ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களுக்காகப் பாடுபட்டபொழுது, ராணுவத் தளபதியான பைத்தியக்காரன் மல்கமினல் சுடுபடக்கூடிய ஆபத்தை இராமநாதன் எதிர்நோக்கினர்.

இலங்கைத் தேசிய காங்கிரசை நிறுவி, பின்பு நிராகரிக்கப்பட்ட பீரிஸ் சமரவிக்கிரமா கடிதத்தில் ஈடாடும் சந்தேகமுடையவர்களும் பின்வாங்குபவர்களுமாகிய நாட்டு மக்களைச் சேர்த்து, விடுதலைக்கான கடைசிப் போராட்டத்தை அருணசலம் தொடக்கிவைத்தார். பிரித்தானியர்களால் நியமிக்கப்பட்ட கண்டியர்களின் தலைவர் மீகெனியா அதிகாரும், ஒரு காலத்தில் அவரின் குசுகுசுப்பு பிரித்தானிய ஆட்சியின் பாணியை வழிவகுத்த சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவும், அவர்களுடைய பிரித்தானிய எசமான்கள்போன்று, வெறுப்புடன் காங்கிரசை 'அழுகிய நடுப்பகுதி'யாகக் கருதினர்.

நானும் விடுதலைப் போராட்டத்தில் எனது சிறு பங்கை ஆற்றினேன். ஆனல் இன்று விரக்தியுற்று வாழ்ந்து வருகின்றேன். அன்று நாம் சகோதரர்கள் போன்று தோளோடு தோள் அணிவகுத்தோம். ஆனல் இப்பொழுது ஆள்பவர்களாகவும் ஆளப்படுபவர்களாகவும் மாறியுள்ளோம். தமிழ் சமுதாயத்திற்கு இப்படியான நிலைமை வருமென யார் கனவு கண்டிருப்பார்கள்.

### யூ.என்.பி.போக்கு

கடந்த காலத்தில் பல தேர்தல்களில் தமிழர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியினல் நடாத்தப்பெற்ற பிரசாரத்தை எந்தவொரு தமிழனவது மறக்கமுடியுமா? அவைகள் ஏதேனும் குடும்பத்தின் இனத்தின் அல்லது சாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் போன்று, புத்தகோயில்களுடனும் பருத்தித்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரைக்கும் இலங்கையின் பெரும் பகுதியை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமிழர்களுக்கு கொடுக்க முன்வருவதாகக் குற்றஞ்சாட்டி ஐக்கிய தேசியக்கட்சியின் பிரமுகர்களினல் இலங்கையின் தேசப்படங்கள் நாடெங்கும் எவ்வாறு கொண்டு செல்லப்பட்டன என்பதைத் தமிழன். எப்போதாவது மறக்கமுடியுமா?

அது பழைய ஐக்கியதேசியக் கட்சியென்று சொல்கின்றார் இன். சிறிலங்காசுதந்திரக்கட்சி யத்தந்திரத்தை ஐக்கிய தேசிகக்கட்சியிடம் கற்று, ஐக்கிய தேசியக்கட்கியினல் தீர்மானிக்கப்பட்ட மாவட்ட சபைகளுக்கு எதிராகப் பிரசாரஞ் செய்தபொழுது குருவை மிஞ்சிய சீடராயினர். அப்பொழுது இந்த விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் லங்கா சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் சேர்ந்தன. இலங்கையின்புதிய குடியரசு அரசியல்திட்டம் இக்குழுவினல் உருவாக்கப்பட்டது.

### ஏற்கமுடியாத வாதம்

இலங்கைத் தமிழர்களின் நீண்ட வரலாற்றில் மிகவும் இக்கட்டான இக்காலகட்டத்தில், முன்னைநாள் ஊர்காவற்றுறை உறுப்பினர் வி. நவரத்தினம் போன்ற மதிப்புக்குரிய தலைவர் இன்னும் வேகங்கூடியதும் இன்னும் மும்முரமானதுமான போராட்டம் வேண்டும் என்ற காரணத்தை மட்டும் கூறி, தமிழர்விடுதலைக் கூட்டணிக்குக் குறுக்கே நிற்க நினைப்பதையிட்டு மனம் வருந்துகின்றேன். எனது பழைய நண்பர் சிறில் மார்ட்டின் தமிழ் மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்திற்கு எதிராக நிற்பது பற்றி மனவேதனையடைகின்றேன். ஈழத்தில்உதித்தமார்ட்டின் அவர்கள், சிங்களவராய் இருந்தால் எமது பிரதமந்திரியராய் இருந்திருப்பார். இவ்வளவு காலமாகத் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு சொல் எழுதாத இளைஞர் பொன்னம்பலம் தந்தையின் பெயரைச் சொல்லிப் பாராளுமன்றம் செல்லப் பார்க்கிறார். அவருடைய தந்தையைப் பற்றிக் கூருமல் விடுவது நன்று.

தனிநாட்டுக் கொள்கை இலங்கைத் தமிழர்களினல் அண்மைக் காலத்தில்தான் தீவிரமாகக் கருத்திற்கெடுக்கப்பட்டது. ஐக்கியநாடுகள்சபையில் பல சிறிய நாடுகளின் உறுப்புரிமை ஏற்கப்படுவதால் பிரிக்கப்படுவதற்கு இலங்கை சிறியநாடாக இருக்கிறதென்ற வாதம் ஏற்கப்பட முடியாததொன்றாகும்.

நான் இதை எழுதும்பொழுது ஸ்பானியப் பிரதமர் வடகிழக்கு ஸ்பானியாவிலுள்ள கற்றலோனியாவிற்குத் தமது அமைச்சரவையை அமைப்பதற்கு முன்பு தேசிய சுயாட்சி வழங்க முன்வந்துள்ளாரென பி. பி. சி. அறிவிக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுத் தேர்தலை இங்கே கருதுவதுபோன்று ஸ்பானியாவிலுள்ள கற்றலன்சுகள் அண்மைப் பொதுத் தேர்தலை ஒரு பொதுக் கருத்து அறிவிப்பாகக் கருதினர்.

பெரிய பிரித்தானியாவை ஸ்கொத்லாந்து, வேல்சு, இங்கிலாந்து என அதிகார மாற்றஞ்செய்வதற்குப் பிரதம அமைச்சர் கலகன் திட்டங்கள் தீட்டுகிறாரென்ற செய்தியை வானொலியில் கேட்டேன். நாற்றிமுப்பத்தைந்து ஆண்டுகள் இரத்தஞ்சிந்தும் போராட்டத்தின் பின்பு ஸ்பானியாவின் பாஸ்குகள் விடுதலையைப் பெற்றுக்கொள்ளும் தறுவாயில் இருக்கின்றனர். கனடாவின் மத்தியிலுள்ள கியூபெக்குக்கும் விடிவு கிட்டுகின்றது.

### கிழித்தெறியப்பட்ட உடன்படிக்கைகள்

தமிழர்களின் உரிமையை வழங்கும் எந்த அரசாங்கத்திற்கும் ஆதரவு வழங்கப் போவதாக சிறில் மாட்டின் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனல் அது எப்பொழுதாவது நடக்குமா? மீறப்பட்ட வாக்குறுதிகளின் பட்டியலைக் கீழே குறிப்பிடுகிறேன்.

(1) முறையே இலங்கைத் தேசிய அவைத் தலைவரினலும் இலங்கைச் சீர்திருத்தச் சபைத் தலைவரினலும் ஒப்பமிடப்பட்ட 1918ம் ஆண்டு செப்டம்பர் 7ந் தேதிய நிராகரிக்கப்பட்ட ஜேம்ஸ் பீரிசு-சமரவிக்கிரமா கடிதம்.

(2) 1921ம் ஆண்டு நவம்பர் 26ந் தேதி கைவிடப்பட்ட ஜேம்ஸ் பீரிசின் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீர்திருத்தத் திட்டம்.

(3) 1925ம் ஆண்டு யூன் 26ம் நாளன்று யாழ்ப்பாணத்தில் ஒப்பமிடப்பட்டு நிராகரிக்கப்பட்ட சிங்கள-தமிழ் ஒப்பந்தம்.

(4) 1926ம் ஆண்டு யூலை 14ந் தேதியன்று யாழ்ப்பாணத்தில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினல் முன்மொழியப்பட்ட சமஷ்டி அரசியல் திட்டத்தின் கைவிடப்பட்ட திட்டம்.

(5) 1957ம் ஆண்டு யூலை 26ந் தேதிய மூழ்கடிக்கப்பட்ட பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம்.


(6) 1965ம் ஆண்டு மார்ச்சு 24ந் தேதியன்று இரு தலைவர்களினல் ஒப்பமிடப்பட்டுக் கைவிட்டப்பட்ட டட்லி சேனநா

(7-ம் பக்கம் பார்க்க)

# பலவிதங்களிலும் மாறுதல்கொண்ட

# பொதுத்தேர்தல் 77

நமது நிருபர் 'மாலி'



மயிலர்: என்னுடைய மூளை கூளாப் போச்சு!
வேலர்: ஏன்?
மயிலர்: ஆடிப்பிறப்பண்டு எல்லா வேட்பாளரும் வீட்டுக்கு வந்து வயிறுநிறைய ஆடிக்கூள் குடிச்சிட்டு தங்க பெட்டிநிறைய வோட்டுப்போடுங்க எண்டு சொல்லிப் போயிருக்கினம். இப்ப ஆருக்கு வாக்கைப் போடுறது
மணியர்: "கூலாக" யோசிச்சி எங்க அரசியலைக் கூளாக்கா வேட்பாளருக்குப் போடுங்க.

சுந்தர்

குடியரசு இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவிருக்கிறது. தொகுதி நிர்ணய சபையால் அதிகரிக்கப்பட்ட முழுமையும் 160 தொகுதிகளில் 168 பிரதிநிதிகள் இத்தேர்தலின் போது தேர்ந்தெடுக்கபடவிருக்கிறார்கள்.

ஆளுங்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசிய கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு), திரு ரி. பி. சுபசிங்காவின் மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவை இணைந்து ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியகட்சிகளுடன் சுயேச்சை வேட்பாளர்களும் இததேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஐ. தே. க. 152 தொகுதிகளிலும், சிறி ல. சு. க. 145 தொகுதிகளிலும், ஐக்கிய விடுதலை முன்னணி 137 தொகுதிகளிலும். தமிழர் விடுதலைக் கூட்டணி 23 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன..

## மாறுபட்ட தேர்தல்

நடைபெறவிருக்கும் இத்தேர்தல் பல விதங்களில் கடந்த தேர்தலகளை விட மாறுபட்டதாக அமைகிறது.

கடந்தகால தேர்தல்களின் போது ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றின. அப்போது திரு. டி. எஸ். சேனநாயக்காவும் அவர்களுக்குப் பின் அவரது மகன் திரு. டட்லி சேனநாயக்காவும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலங்களிலும், திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவும் அவருக்குப் பின் அவரது மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலங்களிலும் பிரதமரானார்கள். (இடைப்பட்ட சிலகாலங்களில் வேறு சிலர் பிரதமர்களாக இருந்திருக்கிறார்கள்)

இம்முறையும் கட்சி அடிப்படையில் இம்மாற்றம் நிகழ்ந்து ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்படின் இந்த பாரம்பரியம் மாற்றமடைந்து புதிய ஒரு குடும்பத்தவரான திரு. ஜே. ஆ. ஜெயவர்த்தன பிரதமராவார்.

இது தவிர—

இந்த இரண்டு பெரும் கட்சிகளோடு இம்முறைத் தேர்தலில் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தனித்து போட்டியிடுகிறது. கடந்த தேர்தலில் இவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தேர்லில் போட்டியிட்டார்கள்;

ஆக, ஆட்சிபீடத்துக்காக இம்முறை மும்முனைப் போட்டி நடைபெறுகிறது.

## வடக்கு கிழக்கில் கூட்டணி

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் இதுவரைகாலமும் சமஷ்டியும், ஒற்றையாட்சியும் கோரி, தெரிவு செய்யப்பட்டு, அவ்வப்போது ஆளும் கட்சிகளுக்கு ஒத்துழைப்பும் நல்கி வந்த தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இம்முறைத் தேர்தல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்து தனிநாடு கோரிக்கையை முன்வைத்து அதற்கான சர்வசன வாக்கெடுப்பாகவும் இத்தேர்தலைப் பிரகடனம் செய்துள்ளன. இது ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் சிங்கள பெரும்பான்மைக் கட்சிகள் மத்தியில் விரும்பத்தகாத — பதட்டமான நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மலையக தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அரசியற்பிரிவு இம்முறை இரு தொகுதிகளில் போட்டியிடுகிறது. இது தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் ஓர் அங்கமாக தனிநாடு கோரிக்கைக்கும் ஆதரவு கொடுக்கிறது.

குடியரசு அரசியல் அமைப்பில் 'நியமன உறுப்பினர்' நியமனம் தவிர்க்கப்பட்டிருப்பதும் இத்தேர்தலில் முக்கிய ஓர் அம்சமாகும்.

## புதிய தொகுதிகள்

இவ்விதத்தில் அமையும் இத்தேர்தலில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக அபேட்சகர்கள் தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டார்கள்; தலைவர்கள் சகல தொகுதிகளுக்கும் சூறாவளிச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார்கள்.

கொழும்பு கிழக்கு, கொழும்பு மேற்கு, தெகிவளை, இரதமலானை, பியகம, கடுவெல, மகரகம, கரிஸ்பற்றுவ, பிட்டதும்பர உடதும்பர, மகாநுவர, நுவரேலியா – மஸ்கெலியா காந்தெனிய, தங்கால, மானிப்பாய், முல்லைத்தீவு, சேருவலை, சம்பாந்துறை, ஆனமடுவ, கல்கமுவ, பண்டுவஸ்நுவர, அநுராதபுரம்-கிழக்கு, அநுராதபுரம் மேற்கு மெதிரிகிரிய, ஹலிஎல, வெள்ளவாயர், அறநாயக்க ஆகிய தொகுதி நிர்ணய சபையால் புதிதாக ஏற்பட்ட தொகுதிகள் கொழும்பு மத்தி, நுவரேலியா – மஸ்கெலியா மூன்று அங்கத்தவர் தொகுதிகள் பேருவளை, கரிஸ்பற்றுவ. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதிகள்.

21 தொகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய இடதுசாரி முன்னணி ஆகியவற்றுக்கிடையே நேரடிப்போட்டி நடைபெறுகிறது.

யாப்பகுவவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய இடதுசாரி முன்னணிக்கும், பிங்கிரிவவில் ஐ. தே. க.வுக்கும், சிறி லங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையே நேரடிப் போட்டி நடைபெறுகிறது.

மூதூர், கல்குடா, சம்பாந்துறை ஆகிய தொகுதிகளில் ஐ. தே. க., சிறி ல. சு. க. ஆகியவற்றுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நேரடிப் போட்டியில் ஈடுபடுகிறது. பட்டிருப்பில் ஐ. தே. க. சிறி ல. சு. க., ஐக்கியவிடுதலை முன்னணி ஆகிய மூன்று பெரும்பான்மைக் கட்சிகளுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணி நேரடிப்போட்டியில் நிற்கின்றது.

## மூன்று இடங்களில் இருமுனைப் போட்டி

யாப்பகுவ, பிங்கிரிய ஆகியவற்றுடன் இருமுனைப்போட்டி நடைபெறும். மற்றைய தொகுதி காங்கேசன்துறைத் தொகுதியாகும். இங்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கத்துடன் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகிறார்.

திரு. வாசுதேவ நாணயக்கார இம்முறை சுயேச்சை வேட்பாளராக எகலியகொடையில் போட்டியிடுகிறார். கடந்த தேர்தலில் ல. ச. ச. க. சார்பில் கிரியல்ல தொகுதியில் வெற்றிபெற்ற இவர் அண்மையில் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

கடந்த தேர்தலில் ஐ தே. க. சார்பில் போட்டியிட்ட டாக்டர் டபிள்யு. தகநாயக்க இம்முறை சுயேச்சை வேட்பாளராக காலித் தொகுதியில் போட்டியிடுகிறார்.

கடந்த தேர்தலில் போட்டியிட்ட ஐ. தே. க. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் மறைந்துவிட்டது துரதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும்.

## இருதலைவருக்கும் நயபிக்கை

சிறி. ல. சு. க. தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. ஐ தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் தங்கள் சூறாவளிச் சுற்றுப்பயணத்தில் ஒவ்வொரு தொகுதிகளிலும் தாமே ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று கூறியிருக்கிறார்கள்.

காபந்து அரசாங்கத்தின் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அபேட்சகர்கள் நியமனப்பத்திரம் தாக்கல்செய்த காலங்களில் மீண்டும் ஆட்சியை அமைப்பது பற்றி தமக்கு சற்று ஐயம் ஏற்படவே செய்தாலும் அந்த ஐயம் இப்போது முற்றாக நீங்கிவிட்டதாகவும் ஜூலை 22–ம் திகதி ஆட்சியை மீண்டும் கையேற்கும்படி ஜனாதிபதி தம்மையே அழைப்பார் என்றும் கூறுகிறார்.

இதனை திரு. ஜே. ஆரும் உணர்ந்துள்ளதாலேயே அவர் முன்பெல்லாம் கூட்டங்களில் "நான் ஆட்சிக்கு வரும்போது" என்று கூறிவந்தவர் இப்போது "நான் ஆட்சிக்கு வந்தால்..." என்று கூறி வருகிறார் என்றும் பிரதமர் கூறுகிறார்.

ஐ தே க. ஜனநாயக சோஷலிச அடிப்படையிலான புதிய கட்சி என்று திரு. ஜே. ஆர். பேசிவருவதையும் மறுத்துரைக்கும் பிரதமர். 20 ஸ்தானங்களுக்கு மேல் ஐ. தே. க. பெறமாட்டாது எனறும் ஆருடம் கூறியிருக்கிறார்.

## நாட்டு மக்கள் பாதிக்கப்படவில்லை

உலகசந்தையில் விலைவாசி உச்சக்கட்டத்தை அடைந்த கஷ்டமான நிலைமைகளிலும் நாட்டுமக்களை வெகுவாகப் பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், வேலையில்லாப் பிரச்னைகளை வெகுவாக தீர்த்திருப்பதாகவும், பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டதாகவும் கூறும் பிரதமர், ஆசிரிய நியமனங்களையும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தையும் உதாரணங்களாகக் குறிப்பிடுகிறார்.

ஐ. தே. க. அதன் கடந்த காலங்களில் நாட்டின் அபிவிருத்திக்கு - வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு என்ன செய்தது? என்று கேட்கும் பிரதமர் ஐக்கிய விடுதலை முன்னணி பற்றி தாம் கவலைகொள்ளவில்லை என்று ஒருசிலர் மட்டுமே வெற்றி பெறுவார்கள் என்றும் சொல்கிறார்.

## தனி அரசு அமைப்போம்

ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தான் யாருடனும் கூட்டுச் சேராது தனித்த அரசாங்கத்தையே அமைக்கப்போவதாகவும் அதற்கு தொண்ணூறு ஸ்தானங்களுக்கு மேல் தேவை என்றும், அல்லாத பட்சத்தில் தான் ஆட்சி அமைக்கப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார். இப்படிக் கூறும் திரு. ஜே.ஆர்., திருமதி சிறிமாவோ இப்போதே தனது உடைமைகளுடன் வெளியேற ஆயத்தமாகலாம் என்றும கூறி வந்தார்.

'நான் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாகவே அனைத்துப் பிரச்னைகளையும் தீர்த்துவிடுவேன் என்று பொய்வாக்குறுதி கூற நான் முற்படவில்லை; ஆனல், மக்களின் அத்தியாவசிய பிரச்னைகளுக்கு உடன் தீர்வுகாண்பதுடன லஞ்சம்–ஊழல்களை உடன் களைந்தெறிவேன்; எனது ஆட்சியில் இவற்றுக்கு இடமில்லை; இப்படியானவர்களை எனது கட்சியிலும் வைத்திருக்கமாட்டேன் என்று சூளுரைத்திருக்கிறார் திரு. ஜே. ஆர்.

## "இது எப்படி முடியும்"

ஏப்ரல் கிளர்ச்சி சம்பந்தமாக சிறையிலிருக்கும் திரு. ரோகண விஜயவீர, மற்றையோர் பற்றி மீண்டும் விசாரணை நடத்துவேன் என்று கூறும் திரு. ஜே. ஆர்.; இக்கிளர்ச்சியில் குற்றவாளியாகக் காணப்பட்ட திரு. எஸ். டி. பண்டாரநர்யக்கா எப்படி விடுதலைபெற்று தேர்தலிலும் போட்டியிடுகிறார்? என்றும் கேட்கிறார். பிரதமரின் உறவினர் என்பதனலா இச்சலுகை? என்று கேட்கும் அவர், செல்வி சுனேத்திரா பண்டாரநாயக்கா (தற்போது திருமதி சுனித்திரா ரூபசிங்க) ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பான தகவல்களைக் கொண்டு செல்வதில் கிளர்ச்சிக்காரர்களுக்குஉதவினர் என்றும் கூறியிருக்கிறார்.

## "ஐக்கிய விடுதலை முன்னணி"

ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த டாக்டர் என். எம். பெரேரா, திரு. ரி. பி. சுபசிங்க. திரு. பீட்டர்கெனமன் ஆகியோர், சிறி ல. சு. க., ஐ. தே. க. இரண்டுமே முதலாளித்துவ அமைப்புகள் என்றும் இவர்களால் நாட்டை சோஷலிசப்பாதையில் முன்னேற்றிச்செல்ல முடியாதென்றும் கூறுகிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சேருவலை, அம்பாறை ஆகியஇருதொகுதிகளைத்தவிர, ஏனைய சகல தொகுதிகளிலும் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சகல தொகுதிலும் பிரசாரத்தை மேற்கொண்டு திரும்பியுள்ளார்.

## 'அமிர்' விளக்கம்

தமிழ்ஈழம் ஒன்றே தமிழனுக்கு விமோசனம் என்பதை கடந்த கால சம்பவங்களையும், சரித்திர உண்மைகளையும், கூறி தெளிவாக திரு. அமிர்தலிங்கம் மக்களுக்கு விளக்கியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ஈழம் கோரிக்கையை முன்வைத்துப்போட்டியிடும் இத்தேர்தலில், இதே கொள்கையில் சுயேச்சை வேட்பாளர்கள் பலரும் போட்டியிடுகின்றனர். அத்துடன் ஐ. தே. க., சிறி ல. சு. க. ல. ச. ச. க. ஆகியனவும் இத் தொகுதிகள் சிலவற்றில் போட்டியிடுகின்றன.

ஐ. தே க., ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், கோப்பாய், கிளிநொச்சி, மன்னார், வவனியா, திருகோணமலை, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், புத்தளம் ஆகிய தொகுதிகளிலும் சிறி ல. சு. க. நல்லூர், கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், புத்தளம் ஆகியதொகுதிகளிலும், ல. ச. ச. க., ஊர்காவற்றுறை, கோப்பாய், பட்டிருப்பு, புத்தளம் தொகுதிகளிலும், கம்யூனிஸ்ட் கட்சி பொத்துவிலிலும் போட்டியிடுகின்றன.

## தமிழர் பிரச்னை பற்றி...

தமிழர் பிரச்னையைப் பேச்சுவார்த்தை மூலமும், சர்வகட்சி மாநாடு மூலமும் தீர்ப்பதாக முறையே சிறி ல. சு. கட்சியும் ஐ தே. கட்சியும், இம்முறை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறியிருக்கின்றன.

அதேவேளை—

தேர்தல் பிரசாரத்துக்காக வடக்கே, கிளிநொச்சி வரை வந்த பிரதமரும், வவனியா வரை வந்த திரு. ஜே. ஆரும், தாம் நாட்டைப் பிரிக்கவிடமாட்டோம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

## வன்முறைச் சம்பவங்கள்

பல விசேட ஏற்பாடுகளை இம்முறை தேர்தல் திணைக்களம், பொலிஸ் பகுதியினர், அஞ்சற் பகுதியினர் மேற்கொண்டிருக்கின்றனர். அதேவேளை கடந்த, தேர்தல்களைவிட இம்முறை வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறார். மட்டக்களப்பு, கண்டி மாவட்டங்களிலேயே வன்செயல்கள் கூடுதலாக நடைபெற்றிருக்கின்றன.

[7-ம் பக்கம் பார்க்க]

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

# ஈழநாடு

## தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

## போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........................ |
| 80. | வட்டுக்கோட்டை | ........................ |
| 81. | காங்கேசன்துறை | ........................ |
| 82. | மானிப்பாய் | ........................ |
| 83 | கோப்பாய் | ........................ |
| 84. | உடுப்பிட்டி | ........................ |
| 85. | பருத்தித்துறை | ........................ |
| 86. | சாவகச்சேரி | ........................ |
| 87. | நல்லூர் | ........................ |
| 88 | யாழ்ப்பாணம் | ........................ |
| 89. | கிளிநொச்சி | ........................ |
| 90. | மன்னார் | ........................ |
| 91. | முல்லைத்தீவு | ........................ |
| 92. | வவுனியா | ........................ |
| 94. | திருகோணமலை | ........................ |
| 95. | மூதூர் | ........................ |
| 96 | கல்குடா | ........................ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........................ |
| | (2) | ........................ |
| 98. | பட்டிருப்பு | ........................ |
| 100. | சம்மாந்துறை | ........................ |
| 101. | கல்முனை | ........................ |
| 102. | பொத்துவில் (1) | ........................ |
| | (2) | ........................ |
| 103. | புத்தளம் | ........................ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ............ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ............ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ............ | ............ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், ஏதனைய கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைகளுக்கும் அதன் நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத்தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்துவரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977

# "தமிழ் மக்கள் உரிமைபெற ஐ. தே. க வை ஆதரிக்க வேண்டும்"

மானிப்பாய், திங்கள்

தமிழ்பேசும் மக்களின் சகல உரிமைகளைப் பெறுவதற்கும் மனக்குறைகளைப் போக்கி சிங்கள மக்களுடன் இணைந்து வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி நாம் எல்லோரும் இந்நாட்டவர் என்ற ரீதியில் தன்மானத்துடன் வாழவும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கவேண்டும்'

இவ்வாறு மானிப்பாய்த் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப்போட்டியிடும் திரு. எஸ். அலோசியஸ் கூறினார்.

திரு. ஜெயராஜா தலைமையில் சண்டிலிப்பாயில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. அலோசியஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஏழாண்டு காலமாக கஷ்டங்கள் பலவற்றை அனுபவித்தோம். இருளில் வாழ நேர்ந்தது இருளை அகற்ற ஒரு மெழுகுவர்த்தி போதும். வாக்குரிமை என்ற மெழுகுவர்த்தி எமது கையில் இருக்கின்றது. அதைப்பயன்படுத்தும் காலம் இப்போது வந்துவிட்டது. பலவிதமான இன்னல்களை அனுபவித்த நாங்கள் கொஞ்சமும பயமின்றி தயங்காது இனி நல்லரசாங்கத்தைத் தெரிவுசெய்யவேண்டும்

ஒருவர் உண்மையான ஜனநாயக வாதியென்றால் தன் மனச்சாட்சியின்படி. தனது அந்த ராத்மாவின் கட்டளையின்படி தனது வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும். இந்த அரசாங்கம் மக்களுக்குச் செய்த அநீதிகள் அதிகம். தான் அளித்த எத்தனையோ வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இந்த அரசாங்கத்தை எந்தஅளவுக்கு மக்கள் வெறுக்கின்றனரோ அந்த அளவுக்கு ஒரு நல்ல அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்ற உணர்வு அவர்களிடையே தலைதூக்கி நிற்கிறது.

தமிழ்பேசும் மக்களின் சகல உரிமைகளையும் பெறுவதற்கும் மனக்குறைகளைப் போக்கி, சிங்களமக்களுடன். இணைந்து. வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி நாம் எல்லோரும் இந்நாட்டவர் என்ற ரீதியில் தன்மானத்துடன் வாழ ஐ. தே. கட்சியை ஆதரிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

(இ)

## "பெயர் சொல்லி ஆதரிக்காதீர்"

யாழ்ப்பாணம், செவ்.

"எமது சங்கத்தின்பேரால் எவருக்கும் தேர்தலில் ஆதரவு நல்கவேண்டாம்" என்று வட-இலங்கை பௌத்த சங்க அங்கத்தவர்களுக்கு மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. எஸ். எம். ஜே. செனரத்ன அறிவித்துள்ளார்.

"எங்கள் சங்கத்தின் சில அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத் தொகுதியில் சில வேட்பாளருக்கு ஆதரவு நல்குவதாக வதந்திகள் பரவியுள்ளன. எனவே இதைத்தவிர்க்கு முகமாகவே எமது சங்கத்தின் பெயரைச் சொல்லி ஆதரவு நல்கவேண்டாம்; நிர்வாக சபையில் இருக்கும் சகல அங்கத்தவர்களும் அரசியலில் சம்பந்தப்பட வேண்டாம்" என்றும் அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(கு)

## "தமிழ்ஈழக் கோஷம் உண்மையல்ல"

—கு. விநோதன்

அரியாலை, செவ்வாய்

"தனித்தமிழ்நாடு அமைக்க வேண்டுமென்று வட்டுக்கோட்டைமகாநாட்டில்செய்த தீர்மானத்துக்கு மக்களிடம் அனுமதி கோரவும், தமிழ் மக்களிடையே சர்வசன வாக்கெடுப்பு நடாத்தவுமே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோமென்று மேடைக்குமேடை விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் முழக்கம் செய்வது உண்மையான சாதி-மத-பேதமற்ற சோசலிஷ தமிழ் ஈழத்தைக் காணவல்ல என்பதை கூட்டணியினர் நிருபணஞ்செய்துவிட்டனர்."

இவ்வாறு சுதந்திரக்கட்சிப் பிரமுகர் சட்டத்தரணி திரு. கு. விநோதன் கூறினார்.

சமாதான நீதிபதிகளாக நியமனஞ்செய்யப்பட்டுள்ள வைத்திய கலாநிதி க.ஜோர்ஜ், சி. அருச்சுனன் ஆகியோருக்கு சுன்னாகம் 3-ம் வட்டாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலும் பொது மக்களாலும் சுன்னாகம் சந்தை மைதானத்தில் திரு. கே. மார்க்கண்டன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற பொது வரவேற்பில் திரு. கு. விநோதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழுக்கு உரிமையும் சம அந்தஸ்தும் பெற உண்மையிலே கூட்டணியினர் விருப்பம் உடையவர்களானால் தமிழுக்கு ஒத்துழைப்பு நல்கும் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட அமைச்சர்களான திருவாளர்கள் குமாரசூரியருக்கும், பீட்டர் கெனமனுக்கும் எதிராக வேட்பாளர்களை நிறுத்தியதேன்? அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்து கண்டி யாத்திரை மேற்கொண்டவரும், தமிழ் மக்கள் அதிகமாக வாழும் தொகுதியில் போட்டியிடுபவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எதிராக வேட்பாளரை நியமிக்காததேன்? என்று கேட்கிறேன். இவைகளிலிருந்து இக்கூட்டணித் தலைவர்களின் போக்கு புரிகிறது."

(உ)

# வி.நவத்திற்கு ஆதரவு

பலாங்கொட, திங்கள்

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவர் திரு வி. நவரத்தினம் வெற்றி பெற வேண்டும்" என்று பலாங்கொட குன்றநாடு மாமன்றச் செயலாளர் திரு. க. மனோகரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

"ஊர்காவற்றுறைத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அளிக்கப்போகும் தீர்ப்பு தென்னிலங்கையில் பரந்து வாழும் சுமார் 20 லட்சம் தமிழரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடியதாக அமையும்" என்று இவ்வறிக்கையில் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது; "1948-ம் ஆண்டில் குடியுரிமை மறுக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களுக்காகக் குரல் கொடுத்த தமிழ் அரசுக்கட்சியை ஆதரித்த தமிழ்மக்கள் 1967 ல் ,5¼லட்சம் தமிழர்களை இந்நாட்டில் இருந்து வெளியேற்றும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்த திரு.வி. நவரத்தினத்தை இம்முறை ஆதரிக்கவேண்டும்". (உ)

## புதிய கட்டடம்

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறை கலைமணி சன சமூக நிலையத்தினர் 30,000 ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளனர்.

மண்டபம், நூல் நிலையம், அலுவலகம் ஆகிய வசதிகளுடன் இப்புதிய கட்டடம் அமையும்.

(7-ம் பக்கம் பார்க்க)

# "தேர்தலில் வென்றதும் உங்கள் மத்தியிலேயே வாழ்வேன்"

## காங்கேசன் மக்களுக்கு 'அமிர்' உறுதி

மாவிட்டபுரம், திங்கள்

"தேர்தலில் வென்றால் நான் தொகுதியைக் கவனிக்கமாட்டேன் எனப் பிரசாரஞ் செய்யப்படுகிறது. ஆனால் நான் தேர்தலில் வென்றதும் உங்களில் ஒருவனாக உங்கள் பகுதியிலேயே வாழ்வேன். தொகுதித் தேவைகளை நிறைவேற்றத் தயங்கமாட்டேன்."

இவ்வாறு அளவெட்டியை அடுத்த பன்னாலை பூதராயர் கோவில் வீதியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

செல்வன் எஸ். செந்தில்மோகன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் தமிழர் கூட்டணியின் தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரிக்கவில்லையென்றும், தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தமிழ் மக்கள் கூடுதலாக ஆதரிப்பதாகவும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். அவர் கலந்துகொண்ட கூட்டத்தையும், அவர் வந்திறங்கிய ஹெலிகொப்டரையும் வேடிக்கை பார்க்கச் சென்றவர்களைக் கருத்திற்கொண்டு கூறிய இக்கூற்று முற்றிலும் தவறானதென்பதை இத்தேர்தல் முடிவு எடுத்துக்காட்டப் போகிறது."

மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் "தமிழ் மக்கள் விடுதலைப் பாதைக்கு எத்தகைய தீர்ப்பு அளிக்கப் போகிறார்கள் என்பதுதான் இன்று எதிர்பார்க்கப்படுகின்றது. விடுதலைப் பாதையையே நாம் விரும்புகிறோமென நாம் தீர்ப்பளிக்கும் பட்சத்தில் நாம் அடிமை வாழ்வை ஏற்றுக்கொண்டதாகவே கருதப்படும். ஆகவே தமிழ் மக்கள் விழிப்புடன் செயலாற்றவேண்டும்" என்றார்.

திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(அ)

# கத்தோலிக்க ஆசிரியரும் கூட்டணிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

இளவாலை மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஆதரவளிப்பதென தனது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் தீர்மானத்தை ஆதரித்து இத்தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## மரத்தில் இருந்து வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

சீவல் தொழிலாளி ஒருவர் கள்ளுச்சீவுகையில் மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து மரணமான பரிதாப சம்பவம் ஒன்று உடுவிலில் நடைபெற்றுள்ளது.

கணபதி கோவிந்தன் (60 வயது) என்ற பிரஸ்தாப வயோதிபச் தொழிலாளியின் மரணம் தொடர்பாக யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்திவிபத்து மரணம் எனத்தீர்ப்பளித்தார்.

(இ-உ)

REGAL (JAFFNA)
Daily: at 4-45, 7-00 & 9-30 p.m. only
MISSION TO KABUL
War Film
(Scope-Color)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - ஜெய்சித்ரா
அக்கரைப்பச்சை
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் - லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - பத்மினி - சுந்தரராஜன் - சோ
தேரோட்டம்
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

ராணி (யாழ்ப்பாணம்)
76-வது நாள்
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
73-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

RIO (Jaffna)
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
Now Showing
Sex Comedy
CHASTITY BELT
(கற்புக் கவசம்)
(Adults Only)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
மகத்தான 2-வது மாதம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

'ஐ. தே. க. ஆட்சியில்

## அரச காணிகள் ஏழைகளுக்கு இலவசமாகக் கிடைக்கும்' —ஜே- ஆர்

காலி, திங்கள்

''இந்தியமக்கள் அதிகம்கல்வி கற்றவர்களாக இல்லாத போதிலும் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் அவரது புதல்வருக்கும் நல்லபாடம் படிப்பித்து விட்டனர். எமது நாட்டு மக்கள் நன்ருகக் கல்விகற்றவர்கள். ஆட்சிபீடத்திலிருந்த கட்சிகளை தோல்வி அடையச்செய்த அனுபவம் உடையவர்கள். இப்போது ஆட்சி பீடத்தில் இருப்பவர்களுக்கு அவர்கள் என்னபாடம் படிப்பிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும் ''

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினர்.

பத்தேகமத் தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. ஈ. டி. விக்கிரமாதிலேக்கை ஆதரித்து யக்கமுல்ல என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இம்மாதம் 21-ம் திகதிக்குப் பின்னர் நாம் ஒரு புதிய பாதையை அமைக்க உள்ளோம். இப்பாதையை எவருமே தடைசெய்யமுடியாது.

''இப்போது ஆட்சியிலிருக்கும் அரசு, அரசுக்குச் சொந்தமான காணிகளை ஏழை எளிய மக்களுக்கு விற்பனை செய்துள்ளது. நாம் ஆட்சிக்குவந்தால் இந்தக்காணிகளை உறுதிகளுடன் ஏழைமக்களுக்கு இலவசமாகவே வழங்குவோம்.

மற்றும் பலரும் உரையாற்றினர். (இ)

## தமிழரின்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம்.

சுதந்திரம் தானமாகத் தரப்படுவதல்ல; போராடி வென்றெடுக்கப்படுவது. இதனை மாநாடு கூட்டி இணக்கமாகவும் வென்றெடுக்கலாம் என்பது' என்னவோ உண்மை தான். ஆனல் அது, புது அரசாங்கத்தின் அறிவு நுட்பத்திலும், அரசியல் மேதகைப் பண்பிலும் தங்கியிருகின்றதென்றும், தமிழர் ஒற்றுமை விடுதலை முன்னணியின் ஏற்கப்பட்ட தலைவர்களின் அறிவு நுட்பத்திலும் அரசியல் மேதகைப் பண்பிலும் தங்கியிருக்கிறதென்றும் திட்டவட்டமாகக் கூறுகின்றேன். ஆனல் எல்லோரும் ''ஆகக் குறைந்தது, ஆகப் பிந்தியது'' என்ற அவல நிகழ்ச்சிகளை நினைவில் வைத்திருக்கவேண்டும்.

சுய மரியாதையுள்ள எல்லாத் தமிழர்களும் ஒன்றை ஒத்துக்கொள்ளுகின்றனர் நாம் காலனி ஆட்சிக்குத் திரும்ப முடியாது. இப்பொழுது நடைபெறுவது சுதந்திரம், சமத்துவம், தோழமை (அதுவும் முக்கியமானது) போன்றவற்றுக்கான விடுதலைப் போராட்டமாகும். ஒரு நாடு, ஒரு மக்கள், ஒரு மொழி, ஒரு சமயம் என்ற கிட்லரின் வெற்றுப் புனைந்துரைக்குச் சாவு மணி அடிக்கவேண்டும். அது ஈற்றில் வீழ்ச்சியுற்ற பைத்தியக்கார மனிதனின் கனவாகும். தமிழர்கள் இனிமேல் தங்களுடைய நம்பிக்கையை ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் வைத்திருக்கமுடியாது.

—...

## புதிய கட்டடம்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்தமாதம் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படும் என்றும் இவ்வூர்ப் பெரியாரான திரு. த. ப. தியாகராசாபிள்ளை கடந்த 25 வருடகாலமாக இச்சனசமூக நிலையம் இயங்கிவந்துள்ள தற்போதைய காணிக்கட்டடத்தின் தனக்குரிய பாகத்தை நன்கொடையாக வழங்கியுள்ளாரென்றும் இச்சன சமூக நிலையச் செயலாளர் தெரிவித்தார். (உ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - லஷ்மி
ராணி யார் குழந்தை

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

## தேர்தலில் ஏன் போட்டியிடுகிறேன்
### வட்டு. இரட்டாய் விளக்கம்

மாவிட்டபுரம், திங்கள்

''சிறுபான்மைத் தமிழரின் மனித உரிமைப் போராட்டத்தை மேலும் வழி நடத்திச் செல்ல நாமே முன்னின்று உழைக்கும் கால கட்டத்திற்குத்தள்ளப் பட்டிருக்கிருேம். கேட்டுப்பெறுவதல்ல மனித உரிமை. போராட்டத்தின் மூலமாகவே நமது உரிமைகளை நாம் வென்றெடுக்க வேண்டும். ஆகவே தான் சிறுபான்மைத் தமிழரின் ஒற்றுமையையும் உணர்ச்சி வேகத்தையும் ஒருமைப் படுத்தும் நோக்கத்துடன் இத்தேர்தலில் எமது சமூகத்தின் சார்பாக வட்டுக் கோட்டைத் தொகுதியில் போட்டியிட முன் வந்திருக்கிறேன்''

இவ்வாறு காரைநகர் - மல்லிகையில் நடந்த கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி சுயேச்சை அபேட்சகர் திரு. வை. இரட்டாய் கூறினர். அவர் மேலும் பேசுகையில்:

''திரு. ஆ. தியாகராசா இப்பொழுது மேடைகளில் இரட்டாய்க்கும் தமக்கும் வேறுபாடு இல்லை என்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## ''நாட்டைப் பிரிப்பதென்பது தீர்க்கதரிசனமற்ற கூற்று''

யாழ்ப்பாணம், செவ்வாய்

''பொருளாதார பலம் இல்லாத நாட்டின் வடக்குக் கிழக்கைப் பிரிப்போம் என்று கூட்டணியினர் சொல்கின்றனர் இது தீர்க்கதரிசனமற்ற முடிவாகும்'' என்று யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளராகிய திரு. ஏ. ஜி. இராஜசூரியர் முஸ்லிம் வட்டாரம் காதி அபூபக்கர் வீதியில் தனக்கு ஆதரவாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''தமிழ்த் தலைவர்கள் இளைஞர்களது முக்கிய பிரச்னையான வேலையில்லாப் பிரச்னையைத் தீர்த்து வைக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை. ''திரு. குமார் பொன்னம்பலம் மக்களுக்குச் சேவை செய்யப் போவதாகச் சொல்லி இன்று வந்துள்ளார். இவ்வளவு காலமும் இவர் மக்களுக்குச் சேவை செய்யவராமல் இப்போது வந்துள்ளார். திரு.சி.எக்ஸ். மாட்டீனைப் போலவே மக்களது வாக்குகளைப் பெற்றபின் இருவரும் மக்களை மறந்து விடுவார். முன்னர் துரையப்பாவைத் துரோகப்பா என்றவர்கள் இப்போது தியாகியப்பா என்று சொல்கின்றுர்கள். நான் 25 வருடகாலம் ஸ்தல தாபனங்களில் சேவையாற்றியுள்ளேன். முக்கியமாக பளையிலும், யாழ்ப்பாணத்திலும் எனது சேவையை மக்கள் அறியமுடியும். எவ்வளவோ பின்தங்கிய பளைப்பகுதியை நான் செழிப்புள்ள ஒரு நகரமாக மாற்றினேன். அங்கே நூல்நிலையம் நிறுவி உள்ளேன். 7 கிராமங்களை ஒன்றிணைந்த வீதி, மின்சாரவசதி, விளையாட்டு மைதானம், பல சந்தைகள் ஆயுள்வேத வைத்தியசாலை என்பனவற்றை நிறுவி உள்ளேன். யாழ்ப்பாணத்தில் அமரர் துரையப்பாவுடன் சேர்ந்து தண்ணீர்த்திட்டம், மின்சாரத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளேன்.

''நான் வென்றுல் யாழ்ப்பாணத் தொகுதியில் பல தொழிற்சாலைகள், கடல் தொழிளாளர்களுக்கான பல அபிவிருத்தி வேலைகள் சிறுபான்மைத் தமிழருக்கு வீடமைப்பத் திட்டம் ஆகியவற்றை நிறுவ நான் பாடுபடுவேன்''.

நல்லூர்த் தொகுதிச் சுயேச்சை வேட்பாளர் திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா திருவாளர்கள் கே. செல்வராஜா, ஜனுப் எம். எஸ். ஏ. காதர் உட்படப்பலர் உரையாற்றினர். (கூ-அ)

## பலவிதங்களிலும்—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 7 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது மட்டக்களப்பில் மாத்திரம் ஐவர் கொலை செய்யப்பட்டிருக்கிறுர்கள். கண்டி மாவட்டத்தில் பல கட்சிக் கிளைகள் தீயிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கல்வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது

பாதுகாப்புப் பிரதேசம்

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், முக்கிய அமைச்சர்களாக வரவிருப்போர் அடங்கிய 28 தொகுதிகளின் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும் கொழும்பு ரோயல் கல்லூரி, கொழும்பு வளாகம் ஆகியன அமைந்த பிரதேசம் 19ந் தேதியிலிருந்து 22ந் தேதி வரை பாதுகாப்புப் பிரதேசமாகப் பலத்தபொலிஸ் பந்தோபஸ்துடன் இருக்கும் பொலிசாருக்குப் பலவிதமான தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் எந்த நிலைமையையும் சமாளிக்கப் பொலிஸ்பிரிவுகள் ஐரூர்படுத்தப்பட்டுள்ளதாகவும். கூட்டுச் சேராநாடுகளின் உச்சி மாநாட்டில் இயங்கிய முறையில் பொலிஸார் இயங்க இருப்பதாகவும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்திருக்கிறுர். அபேட்சகர்களுக்கும் இம்முறை பூரண பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. (ப)

## வாலிபர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் இந்நிலையம் மேலும் பல துறைகளிலும் வளர்ச்சி அடைய பாடுபட வேண்டுமென்றும்'' கூறினர்.

மற்றும் உருத்திரபுரம் கிராம சேவையாளர் திரு. நல்லையா கி.மு தலைவர் மாதர் சங்கத் தலைவி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (உ)

ஈழநாடு
The EELANADU

# இளைஞரிடையே விழிப்பை ஏற்படுத்தியவர்கள் தலைவர்கள்

## சாவகச்சேரி 'நவம்' கூறுகிறார்

மட்டுவில், திங்கள்

"தமிழ் மக்கள் தங்கள் மானத்தை விலைகூறி விற்பதற்குத் தயாராக இல்லை என்ற விழிப்புணர்ச்சியை இளைஞர்கள் மத்தியில் எடுத்துவிளக்கியவர்கள் தமிழ்த் தலைவர்கள். 1972ம் ஆண்டுக்கு முன் தமிழ் மக்களுக்கு இருந்த அற்ப சொற்ப சலுகைகளும் புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் மூலம் அகற்றப்பட்டது. தமிழ் மக்களை குறிப்பாக இளைஞர்களை நடைப்பிணமாக்கியது. இளைஞர்களுக்குப் போதியளவு கல்விவசதி மறுக்கப்பட்டது. வேலைவாய்ப்பில் திறமைக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது. உயர்கல்வியில் தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டது. மற்றும் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் தமிழ் இளைஞர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. படித்துப்பட்டம்பெற்றவர்களும் போதியளவு வேலைவாய்ப்புத்திட்டம் இல்லாமல் பொருளாதார வசதியற்றவர்களாக வாழ்க்கையிலே விரக்தி அடைந்தனர். இந்நிலையில் இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டம் தமிழ் மக்களுக்கு விரோதமானது என்பதை எதிர்த்து தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இவ்வாறு மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை அரங்கில் திரு. ச. ஆறுமுகம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான தம்மை ஆதரிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: சிறை சென்ற இளைஞர்களுள் வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவைசேனாதிராசா போன்ற எல்லா வாலிபர்களும் கொலை, கொள்ளை, கற்பழிப்புச் சம்பவங்களால் தான்சிறைசென்றார்கள் என்று குற்றம் சாட்டுகின்றார்கள். இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. இவைகளை இளைஞர்கள் செய்திருந்தால் இளைஞர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பார்கள்.

# மூன்று மாதங்களில் 400 கோடி ரூபா விரயம்!

புதுடில்லி, ஜூலை 18

காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்திலிருந்த சில மாநில அரசுகள் இவ்வருடமுதல் மூன்றுமாத காலத்தில் 400 கோடி ரூபாவை விரயம் செய்திருக்கிறது என்று இன்று நடைபெற்ற லோக சபைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் குற்றம் சுமத்தினார்!

'மாநில சட்டசபைத் தேர்தல்கள் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது. காங்கிரஸ் நிர்வாகத்திலிருந்த சில மாநிலஅரசுகள் இவ்வருட ஜனவரி மாதம் முதல் மூன்றுமாத காலத்தில் 400 கோடி ரூபாவை வீணடித்துள்ளது. இப்பணம் தேர்தல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# தேர்தல்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்கிலும் தமிழ் மக்களுக்கென தனியானதொரு நாட்டை அமைப்பதற்கு மக்களிடம் அனுமதிகோரும் சர்வஜன வாக்குரிமையாகப் பயன்படுத்தப்போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூறிவருகிறது.

### பிரசாரங்கள் இன்றுடன்முடிவு

இந்த நிலையில் இன்று நள்ளிரவுடன் பொதுத்தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் தேர்தல் சட்டத்திற்கு அமைய முடிவடைகின்றன,

சகல அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் தமது இறுதிப் பிரசாரக் கூட்டங்களை பிரமாண்டமான முறையில் நாட்டின் முக்கிய பகுதிகளில் இன்று நடத்துகின்றனர்'

இன்று நடைபெறும் இறுதி பிரசாரக் கூட்டங்களில் அரசியல் தலைவர்கள் பல புதிய முக்கிய இறுதிக் கருத்துகளைவெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன, என்று தேர்தல் ஆணையாளர் திரு. டயஸ் அபயசிங்கா அறிவித்துள்ளார்.

தேர்தல் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறும் எனதாம் நம்புவதாகவும் திரு. அபயசிங்கா தெரிவித்துள்ளார்

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

தேர்தலுக்கான சகல பந்தோபஸ்து நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

### 17 ஆயிரம் பொலிசார் சேவை

தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு 17 ஆயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். இவர்களுடன் 5 ஆயிரம் றிசேர்வ் பொலிசாரும் கடமை புரிவர்

அத்துடன் 5 ஆயிரம் இராணுவ வீரர்களும் கடமையில் ஈடுபடுத்தப் படுவர்

இராணுவ வீரர்கள் நாட்டிலுள்ள கேந்திர நிலையங்களையும் அரசாங்க கூட்டுத்தாபன கட்டிடங்களையும் காவல்காக்கும் நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவர்.

### 6 312வாக்குச் சாவடிகள்

நாடு முழுவதும் இம்முறை 6,312 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கும் நேற்றுமுதல் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (இ)

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்றுகொழும்பு ஹவ்லக் திடலில் நடைபெறும் இறுதி தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் அறிவிப்பார்.

இன்று இதுபற்றி தெரிவிக்க உள்ளதாக திரு. ஆர். ஏற்கனவே அறிவித்திருந்தார். (இ)

# உலகுக்குணர்த்த—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிறைவேற்றியுள்ளன.

### மலையக இளைஞனுக்கு அஞ்சலி

தமிழ் ஈழத்தின் இன்றைய அரசியல்நிலை குறித்து ஆராயக் கனடாத் தமிழ் ஈழ இயக்கமும் அதன் சகோதர அமைப்பான அமெரிக்கத் தமிழ் ஈழ இயக்கமும் இணைந்து டிற்ரோயிற், மிச்சிக்கனில் விசேட கூட்டமொன்றை நடாத்தினர் ஹாஜி ஜமால்டீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மலையகத்தில் உயிர்நீத்த இளைஞர் சிவனு லெட்சுமணனுக்கு இரண்டு நிமிட நேர அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் இச்சம்பவம் தொடர்பாகச் சர்வதேசத் தொழிலாளர் இயக்கங்களுடன் தொடர்புகொள்ளுவதற்கெனப் பேராசிரியர் ஜெயபாலன் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களை டாக்டர் மொகமட்கான் பிரேரிக்க, கட்டடக் கலைஞர் எல். சிவலிங்கம் வழிமொழிந்தார் இத்தீர்மானங்களுக்கு ஆதரவாகப் பிரபல அரசியல் விஞ்ஞானி ம மகாஉத்தமன், மாணவர் தலைவர் எம். சி. றவிலோஜன், சி. பவானந்தன், டாக்டர் ஈ. பராராஜசேகரம் உட்படப் பலர் பேசினர்.

அத்தீர்மானங்களின் சாரம் பின்வருமாறு:

உண்மையான மக்கள் இயக்கத்தை நடாத்துவார்களென நாம் எதிர்பார்த்திருந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தமிழர் கூட்டணியில் இணைந்துவிட்டார்கள் என்ற செய்தி எமக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. தேர்தலில் ஈடுபடாது சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் கொண்ட இயக்கத்தை நடத்தி விவசாயிகள், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட தமிழர், இஸ்லாமியத்தமிழர், ஆகியோரை ஒன்றிணைத்து மக்கள் போராட்டம் மூலம் தமிழ் ஈழத்தை நிறுவி அங்கும் சனநாயகம், விஞ்ஞான சோஷலிஸம் ஆகியன மலரத் தமிழ் ஈழ விடுதலைக்கு உள்ளத் தூய்மையுடன் பணியாற்றும் என்று நாம் கொண்டிருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தேர்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் ஈடுபடவிட்டுத் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உண்மையான மக்கள் இயக்கத்தை நடாத்தியிருக்கவேண்டும்.

### கோடீஸ்வரனுக்குப் பாராட்டு

திருகோணமலையில் அயல் நாடான ஸ்ரீலங்கா அரசியல் கட்சிகளின் வெற்றியைத் தவிர்க்குமுகமாகச் சுயாட்சிக் கழக வேட்பாளர் தோழர் கோடீஸ்வரன் போட்டியிருந்து விலகிக்கொண்டமைக்காக அவரையும் சுயாட்சிக் கழகத்தையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

### வி. பி.க்கு வரவேற்பு

தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டியது சரியான மார்க்சிச-லெனினிசகொள்கைகளைப் பின்பற்றுபவர்களின் கடமையாகும். இதைஉணர்ந்து எமது பாதையை நோக்கி வந்துகொண்டிருக்கும் தோழர் வி. பொன்னம்பலத்தை இரு கரம் நீட்டி அன்புடன் வரவேற்கின்றோம். தமிழ் ஈழக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவி, எம்முடைய போராட்டத்தில் அவர் முழுமையாகக் கலந்துகொள்ளுவாரென எதிர்பார்க்கின்றோம்.

# மரண அறிவித்தல்

## மா. பொன்னம்மா

மறவன்புலோ மூதாட்டி பொன்னம்மா அவர்கள் சிவபதமடைந்து விட்டார். இவர் நாவற்குழிக் கோயிற்பற்று முன்னைநாள் உடையார் அமரர் மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கம்மா பொன்னையா, அன்னபூரணி தியாகராசா, அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பொன்னம்பலம், நாவற்குழி-மறவன்புலோ முன்னைநாள் கிராமசேவையாளர் கந்தையா ஆகியோரின் அன்புத் தாயாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-7-77 செவ்வாய்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும். தகவல்: மா. பொன்னம்பலம், கைதடி-நாவற்குழி, கைதடி. 6685

# ஜே. ஆர். இன்று இரகசியத்தை வெளியிடுவார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வரும்போது வாழ்க்கைச் செலவைக்குறைத்துமக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான இரகசியத்திட்டம் ஒன்றை

# இன்று

யாழ்ப்பாணம், செவ்

'யாழ். நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி பேய்ச்சி அம்பாள் கோவில் தேர்த் திருவிழா இன்று நடைபெறும். நாளை பிற்பகல் தீர்த்தம், ஆடிப்பூரத்தை முன்னிட்டு புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு 'பூரகர்மம்' எனும் பொருள்பற்றி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரைநிகழ்த்துவார். (கு)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணார்பண்ணை கிழக்கு, கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்பாள் கோவில் திருவிழாவை முன்னிட்டு நாளை இரவு ஊஞ்சல் துவஜா அவரோகணம் சண்டிகேஸ்வரி உற்சவமும், நாளை மறுதினம் பகல் விசேஷ அபிசேகமும் மாலை 4 மணிக்கு கிராமப் பிரதஷணமும், வெள்ளிக்கிழமை பகல் விசேஷ அபிஷேகமும் குளிர்த்தியும், மறுதினம் சனிக்கிழமை மாலை வைரவர் மடையும் இரவு அலங்காரத் திருவிழாவும்நடைபெறும். (கு)

# மாவைஉற்சவம் ஆரம்பம்

மாவிட்டபுரம், திங்கள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் பொதுத்தேர்தல் தினமான 21ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாக இருக்கிறது.

தினமும் விசேஷ அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனைகளுடன் நடைபெறும். இந்த உற்சவத்தில் 22ம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 11ம் திகதி வரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் கந்தப்புராணம் தொடர் விரிவுரை நிகழ்த்தப்படும். இடையிடையே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் விசேஷ சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பக்தர்களின் வசதியை முன்னிட்டு போக்குவரத்து வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சுகாதார, பாதுகாப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (அ)

# தமிழர்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பேன்.

கல்வி: இன, மத, மொழி பிரதேச வேறுபாடின்றி அனைத்து மாணவர்களும் சரிநிகர் சமானமாக நடத்தப்படுதல் வேண்டும் என்பதை வற்புறுத்துவேன்.

தரப்படுத்தல் என்ற அநியாயத் திட்டத்தை அடியோடு அகற்றத் தீவிரமாக முயற்சிப்பேன்.

சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றல்: சாதி அடிப்படையில்தமிழ்மக்களிடையேஉள்ள சமூக ஏற்தத்தாழ்வுகளை நீக்குவதற்கு உழைப்பேன்.

முஸ்லீம்மக்கள்: அவர்களது தனித்துவத்தைப் பாதுகாக்கவும் கலை, கலாச்சாரம், கல்வி தொழில் வளர்ச்சிக்குஉதவவும் பாடுபடுவேன். கூ-அ)

# தேர்தலில்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே கொள்கை உடையவர்களென்றும் பேசுவதாக அறிந்தேன். எனக்கும் தியாகராசாவிற்கும் ஒரு விஷயத்தில் அதாவது தனிநாடு எதிர்ப்பு விஷயத்தில் மாத்திரம் ஒற்றுமையே தவிர மற்றையகொள்கைகளில்அவர்பெரும்பான்மை வர்க்கத்தையும் நான் ஒடுக்கப்பட்டவர்க்கத்தையும் சார்ந்தவர்கள். ஆகையால் எங்கள் இருவருக்கும் வாக்க உறவில் ஒற்றுமைஏற்பட வழியில்லை"

மற்றும் மாவை மகேஸ்வரன், பா. செல்லத்தம்பி, ச. சந்திரலிங்கம், ஆசிரியர் ரி. நல்லையா உட்பட மற்றும் பலரும் பேசினார்கள். திரு. மு. நல்லதம்பி தலைமை வகித்தார். (அ)

# ஒன்றுபட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லய அதிபர் ஜனாப் ஏ.தாவுத் பேசும் போது கூறியதாவது: '1980 ம் ஆண்டுக்கு முன்னர் நாம் தமிழ் ஈழத்தை பெறுவோம். தமிழ் ஈழத்தில் 40 தொகுதிகள் பிரிக்கப்படும். ஆதலால், இப்பொழுது போட்டியிடும், சுயேச்சை வாதிகள் வாபஸ் பெற்று, தமிழ் ஈழத் தேர்தலில் போட்டியிடுங்கள். அந்த 40 தொகுதிகளில் நாம் அவர்களுக்கு இடம்கொடுத்து ஏகோபித்து ஆதரிக்கிறோம்.'

### சத்தியத்தின் எதிரொலி'

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில்: 'முதறிஞர் செல்வா, பெருந்தலைவர் ஜி. ஜி, அமரர் திருச்செல்வம் கட்டி எழுப்பிய ஒற்றுமையை எந்தக் காலத்திலும், எவராலும், சிதைக்க விடோம், எனக்கூட்டணித் தலைவர்கள் எடுத்த சத்தியத்தின் எதிரொலிதான் இந்த ஜனசமுத்திரம். சாவகச்சேரி மக்கள் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள் என்பதை உலகிற்கு காட்டத்தான் போகிறார்கள்' என்றார்.

### திக்குமுக்காடிய 'யோகேஸ்'

யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. வெ.யோகேஸ்வரன், பேச எழுந்ததும், இளைஞர்கள் அணியணியாக சென்று மாலை சூட்டினார்கள். சில இளைஞர்கள் இரத்த திலகமிட்டார்கள். இளைஞர்கள் சார்பில் அவருக்கு உதய சூரியன் சால்வை போற்றப்பட்டு, 'இலட்சிய தலைவன்' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

[இக்கூட்டத்தில் உரையாற்றியோரின் பேச்சு விபரம் நாளைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 19ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.